# தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60 மலர் : 1

## உள்ளுறை

1. வினையே செய்வது நாற்பா ஒத்து விளக்கம் .... 1

இராம. இராமமூர்த்தி
அவ்வையார் மகளிர் கல்லூரி
காரைக்கால்.

2. மலை முதல் மனை வரையிலும்
கண்ட பல கடவுளர் .... 7

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

3. ஆசிரியர் விருத்தமும் கட்டளைக்
கலித்துறையும் (ஓர் ஆய்வு) .... 18

வித்துவான் பெ. கு. வரதராசன், எம். ஏ., பி. ஓ.எல்., பி.டி.,
கிருட்டிணகிரி.

4. பதிப்பாசிரியர் குறிப்பு .... 27

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

5. இரண்டு ஐயங்களும் அவற்றின் தெளிவும் ... 30

டாக்டர். மொ. அ. துரைஅரங்கனார்

6. தொல்காப்பியம் செய்யுளியல்
காண்டிகையுரை .... 33

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு**

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 60 | அட்சய — சித்திரை | மலர்: 1

ஏப்ரல் — மே 1986


## புத்தாண்டு வாழ்த்து

இலங்கருபா னாண்டுகளுள் அழிவிலாத
தெனும்புகழ்சால் அட்சநல் லாண்டே வாழ்க!
நலங்கமழ்நின் ஆட்சியிலே உலகங்கெங்கும்
நலைதீர்த்து நலிவடங்கி வறுமை நீங்கித்
துலங்குக! வல் லரசுபகை மாய்க! மக்கள்
துயர்கெடுக! அருளமைதி சுடர்க! சால்பு
வலங்கமழ வளம்பெருகத் தொழில்கள் ஓங்கி
வாழ்கஉல கொற்றுமையாற் பொலிக மாதோ!

## "வினையே செய்வது" - நூற்பா ஒரு விளக்கம்


(இராம. இராமமூர்த்தி,
அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி, காரைக்கால்)


'தொல்காப்பியக் கடல்' எனப் பெரிதும் பாராட்டப்பெறும் சிறப்பிணைப் பெற்ற தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத் துக்கு உரை வகுத்த பேராசிரியர்கள் பலர். இளம்பூரணர்,

சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் ஆகியோர் தம் உரைகள் இப்பொழுது கிடைக்கின்றன. அத்துடன் பழைய உரை என ஒன்று, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப் பட்டுள்ளது. அவ்வுரை முதன் மூன்றியல்கட்கே அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியர்கள் சில இடங்களில் முரண்பட்டாலும் பலவிடங்களில் ஒருவரையொருவர் தழுவியே உரைவகுப்பாராயினர். அங்ஙனம் உரைவகுத்த இடங்களுள், வேற்றுமை மயங்கியலில், "வினையே செய்வது" எனத் தொடங்கும் நூற்பாவுக்கு உரைகண்ட இடமும் ஒன்று. இங்குக் குழப்பத்திற்குரிய காரணம் யாதெனக் காண்போம்.

அதற்கு முன்னர், அந்நூற்பாவினையும், உரையாசிரியர் தம் உரைகளையும், விளக்கக் குறிப்புகளையும் காண்போம்.

1. "வினையே செய்வது செயப்படு பொருளே
நிலவே காலங் கருவி என்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே."

2. **இளம்பூரணர் உரை :**

"இச்சூத்திரம் என்னுதலிற்றோ எனின் வினைச்சொல் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று."

"இவ்வெட்டொடுந் தோன்றி நிற்கும் வினைச்சொல் என்றவாறு."

வனைந்தான் — இஃது அவ்வெட்டிலக்கணம் தோன்ற நிற்குமாறு.

3. **சேனாவரையர் உரை :**

"வினையும், வினைமுதலும், செயப்படுபொருளும், நிலமும் காலமும், கருவியுமாகிய ஆறும், இன்னதற்கு, இது பயனாக என்று சொல்லப்படும் இரண்டொடுந் தொக்குத் தொழிலது முதனிலை யெட்டாமென்று சொல்லுவர் ஆசிரியர்."

"ஈண்டேதுப் பொருண்மை கருவிக்கண் அடக்கப்பட்டது." "வனைந்தான்" என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய

நிலமும், அத்தொழில் நிகழுங்காலமும், அதற்குக் வியாகருகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும். வனைந்ததனானாய பயனுமாகிய எட்டும் பற்றி அத்தொழில் நிகழ்ந்தவாறு கண்டு கொள்க.

இதனாற் பயன், 'நிலனும், பொருளுங், காலமும், கருவியும். (தொல் - சொல் - உஙச), "செயப்படு பொருளைச் செய்தது போல" (தொல்-சொல்-உஙசா), வினைக்கிலக்கணம் கூறுதலும் பிறவுமாம்.

### 4. கல்லாடர் உரை

" தொழிலினையும் ... ... ... ... ... ... ... வினைச் சொல் பிறத்தற்கு இடமாகிய பொருளது நிலையை".

"வினையது இலக்கணம் வினையியலுள் கூறற்பாலது. அதனை ஈண்டுக் கூறியது என்னையெனின், வேற்றுமைகளைப் பெயர்க்கே உரிமை செய்து கூறினமையின் வினையொடு என்றும் இயல்பில என்பது பட்டு நின்றமையின், அவ்வினை வருங்காலும் வேற்றுமைகளோடு வருவது என்பது அறிவித்தற்கு ஈண்டுக் கூறப்பட்டது".

### 5. பழையவுரை

"வினைப்பெயரையும், வினைச் சொல்லையுந் தோற்று விக்கும் உண், தின், செல், கொல், வனை என்றது முதலாகிய வினையையும் ... ... ... ... ... அவ்வெட்டு என்று சொல்லுவர் ஆசிரியர்.

இதனை, வினையியலுள் கூறாது ஈண்டுக் கூறியது, தொழில் வருங்கால் வேற்றுமையோடு அல்லது வாராது என்பதற்கு.

அவை வருமாறு:- 'அட்டான்' என்புழிச் சாத்தன் சோற்றைக் குழிசியாற் பார்ப்பாற்கு மச்சி நெற்கொண்டு கூரையுள் என்பது விளங்கும்" (சோறு பார்ப்பாரது ஆதலின் ஆறாவது.)

### 6. நச்சினார்க்கினியர் உரை

இது, வேற்றுமைப் பொருள்கள் தோன்றும் இடம் கூறுகின்றது'.

'வினையை முன்வைத்தார், சொற்களையுந் தோற்றுவித்து மேல் நிகழுங்காரியத்திற்கு ஏனை ஏழினுஞ் சிறந்த காரணமாய் நிற்றலின். வினையுந்தொழிலும் வேறு என்பது இச் சூத்திரத்தான் உணர்தற்கு, "வினை", என்று எடுத்துத் "தொழிலின்முத னிலையே", என முடித்தார்.

மேலே காட்டிய பகுதிகளோடு ஒவ்வொருவர்தம் உரைப் பகுதிகளை ஊன்றிப் பயின்றால், வேறுபடுவது போலத் தோன்றினாலும், அவற்றின் ஊடே தொடர்பு காட்டும் இழை ஒன்றும் இருப்பதை நன்குணரலாம். இளம்பூரண அடிகளும், கல்லாடரும் இந்நூற்பாவை வினைச்சொல் இல்க்கணம் கூறுவதாகச் சுட்டுகின்றார். பழைய உரைகாரரும் தெளிவாகக் கூறாது போயினும் விளக்கவுரையில் "வினை" இலக்கண மாகவே இதனைத் தழுவுகின்றார். நச்சினார்க்கினியர் வேற்றுமைப் பொருள்கள் தோன்றுமிடஞ் சுட்டுவதாகவும், காரக வேற்றுமை தோன்றுமிடமாகத் தெய்வச் சிலையாரும், இதனை விளக்கிச் செல்லுவர். சேனாவரையர், உரையில் நேரே சுட்டாது. குறிப்புரையில் வினைக்கிலக்கணம் கூறுதலும். பிறவுமாம் என்பர்.

இந்நூற்பா, வேற்றுமை மயங்கியலுள் இடம் பெற்ற ஒரே காரணத்தால் உரையாசிரியர் பலரும் வினைக்கிலக்கணம் கூறுவதை நேரே-தெளிவாகச் சுட்டத் தயங்குகின்றனர். மற்றும், வினையியலின் முதல் நூற்பாவில், ஆசிரியரே,

> "வினை எனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

எனக் கூறும் பொதுவிலக்கணத்தொடு இது மாறுபடுமோ எனக் கருதி மயங்குவாராயினர். தொல்காப்பியச் சொல் லதிகாரத்தில், பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்ற நான்கியல்களுள்ளும் அவ்வவ்வியலுக்குரிய இலக்கணம் வரைந்தோதப்படுகின்றது ; ஏனையியல்களில் சொற்குரிய பொதுவிலக்கணம் உணர்த்தப்பெறுகின்றது என்பதை யாவரும் நன்குணர்வர். இக்கருத்தை நினைவிற் கொண்டு, மற்றுமொரு முறை அந்நூற்பாவைக் காண்போம். மேலும் எல்லா உரை யாசிரியப் பெருமக்களும் 'வனைந்தான்' என்று முற்றுவினைச் சொல்லையே காட்டாகக் கொண்டு விளக்குதலையுங் காண்க

(பழையவுரைகாரர், "அட்டான்" என்ற முற்றுவினைச் சொல்லைக் காட்டுவர்) இப்பகுதியை நன்னூலொடு ஒப்பிட்டுக்

காட்டப்போந்த பேராசிரியர் க. வெள்ளை வாரணர் அவர்கள், "வேற்றுமைகளை ஏற்குஞ் சொல்லாகப் பெயர்ச் சொல்லும், முடிக்குஞ் சொல்லாக வினையும் வரும் எனச் சுட்டுவர்.

இனி, 'வனைந்தான்' என்னும் முற்றுவினைச் சொல்லை விளக்கு முகமாக, நச்சினார்க்கினியர், செய்வது எழுவாயாயும், வினையும் செயப்படுபொருளும் இரண்டாவதாயும், வினை முதலுங் கருவியும் மூன்றாவதாயும், ஒருவன் ஏற்றுக் கொண்ட வழி இன்னதற்கு இது பயன் நான்காவதாயும், நிலமும் காலமும் ஏழாவதாயும், வனைந்தவன் கொடுத்த குடம் அவன் கையினின்று நீங்குதல் ஐந்தாவதாயும், அதனை ஏற்றுக் கொண்ட வழி இஃது அவன் உடைமையாதல் ஆறாவதாயும் அமைதல் காண்க, என விளக்குவார்.

இதனைக் கருத்திற் கொண்ட நன்னூ லாரும்,
"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறுந் தருவது வினையே"

என வினையியலில் மொழிவாராயினர். இன்னதற்கு இது பயனாக என்பதை மட்டுமே நன்னூலார் கூறாராயினர். இதற்கும்,

"அவைதாம்
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்"

என்ற தொல்காப்பிய நூற்பாவும், உரையாசிரியர் பலரும் காட்டிய, 'கொடியாடிற்று, வழி வழங்கிற்று', என்ற காட்டுகளுமே காரணமாம் என்பதை எண்ணுக.

மற்று, தொல்காப்பியத்தைப் பெரிதும் தழுவி நிற்கும் நேமிநாதரும், தம் நூலில் இத்தகு நூற்பாவினை உருபு மயங்கியலில் கூறாராயினர். நன்னூலார், முத்துவீரிய ஆசிரியர் போன்றாரும் வேற்றுமை மயக்கம் பற்றிக் கூறுமிடங்களில் இத்தகைய செய்தியைக் கூறவில்லை. ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியர் மட்டுமே, வேற்றுமைகளை முடிக்குஞ் சொல்லாம் வினைச் சொற்கும், வேற்றுமைக்கும் உரிய தொடர்பினைச் சுட்டிக்காட்ட இந்நூற்பாவை, வேற்றுமை மயங்கியலில் அமைப்பாராயினர்.

ஆகலின், முடிபாக எண்ணுமிடத்து, இந்நூற்பா வினைக்கிலக்கணங் கூறுவதாகக் கோடலின் இழுக்கொன்றுமில்லை. அத்துடன் முற்றுவினைச் சொல்லின்கண் உருபுப்

பொருள் தோன்றுமாறும் உடன் கூறப்பட்டது. இத்தகு முத்துக்குவியல்களைத் தொல்காப்பியக் கடலிற்றோன்றக் காணலாம். தமிழ்ச் சான்றோர் இத்தகைய செய்திகளைக் கண்டும் காட்டியும் தமிழ் மக்களை இன்புறச் செய்து, தாமும் இன்புறுவாராக!

## சான்றெண் விளக்கம்


1. தொல்காப்பியம், சொல்லதிகாரம் : நூற்பா 113; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1962.
2. மேற்படி - இளம்பூரணர் உரை 1963 ப. எண் 67, 68.
3. ,, - சேனாவரையர் உரை 1970 ,, 88, 89.
4. ,, - கல்லாடர் உரை 1964 ,, 98, 99.
5. ,, - ,, ,, 1964 ,, 380, 381.
6. ,, - நச்சினார்க்கினியர் உரை 1962 ,, 79, 80, 81.
7. ,, - நூற்பா 200
8. வெள்ளை வாரணனார், வித்துவான்.க., 'தொல்காப்பியம் நன்னூல் சொல்லதிகாரம் 1971; பக்க எண் 148, 149.
9. ஆறுமுக நாவலர், 'நன்னூற் காண்டிகையுரை' - 1955 - நூற்பா எண் 320.
10. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-நூற்பா எண். 114.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

'தொல் வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை,
நெய்படக் கரிந்த திண்பொரிக் கதவின்-,
(மதுரை. 353-354)

என்பதனால் பழைமையான வலிமை நிலைபெற்றதும், தெய்வத்தையுடைத்தாகிய நீண்ட நிலையினை உடையதும், பல காலம் நெய் இடுதலால் கருநிறம் படைத்ததுமான கதவினையுடையதாயிருக்கின்ற வாயிலைக் காண்கிறோம். இவ்வடிகளுக்குத் தரும் விளக்க வுரையில், ''வாயிலில் தெய்வம் உறையுமாகலின், அதற்கு அணியும் நெய்யும் ஆம். 'ஐயவி அப்பிய நெய்அணி நெடுநிலை' (நெடுநல். 86) என்பதனால் உணர்க'' என்று நச்சினார்க்கினியர் கூறும் விளக்கத்தால் வாயில் நிலையில் தெய்வம் பேணுதல் விளங்கும். இவ்வாயில் களில் இல்லுறைதெய்வம் மகிழும் வண்ணம் மலர் அணிந்து கொடிகளும் கட்டியிருப்பார்களாம். (பட்டின. 160). மாலைக் காலத்தில் மகளிர்கள் இரும்பால் செய்த தகளியில் விளக்கு ஏற்றி, நெல்லையும் மலரையும் தூவி, இல்லுறை தெய்வத்தை வணங்கி வழிபடுகின்றனர். தெருக்களில் உள்ள மனைகளில் எல்லாம் மாலைக் காலத்தை இவ்வாறு மகளிர்கள் கொண்டாடுகின்றனராம்.

'மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின், பைங்காற் பித்திகத்து,
அவ் இதழ் அவிழ் பதம் கமழ, பொழுது அறிந்து,
இரும்பு செய் விளக்கின் ஈர்த்திரிக் கொளீஇ,
நெல்லும் மலரும் தூஉய், கைதொழுது,
மல்லல் ஆவணம் மாலை அயர' (நெடுநல். 39-44)

எனப் பெண்கள் மாலைக் காலத்தில் இல் உறை தெய்வங்களை வழிபடுதலை நெடுநல்வாடையும் விவரிக்கிறது.

தவிரவும், மனைகளில் வெண்சோறும் கருணைக்கிழங்கி னால் ஆக்கிய கறியும் கூட்டித் தெய்வத்துக்குப் பலியாயிடு

கின்றனர். அதனை உண்பதற்குக் காக்கைகள் தம் பிள்ளைகளைத் தழுவிக்கொண்டு மனையிடங்களிலே வந்து தங்குகின்றனவாம். இக்காட்சியை,

'கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ, கிளை பயிர்ந்து,
கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய, குறுங்கால்
கூழுடை நல்மனைக் குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேர் இசைச் சிறுகுடி' (நற். 367:1-6)

எனவரும் நற்றிணைப் பாடற்பகுதியுள் காணலாம்.

தலைவி ஒருத்திக்காகக் குறித்த மணநாள் விரைவில் வரட்டும் என்று தோழி அத்தலைவியுடனே மனையில் உறையும் தெய்வத்தைக் கைகூப்பி வணங்கி, அதற்குரிய பலியையும் செலுத்துவோம் என்று தலைவியுடன் பேசுகின்றாள்.

'வல்லே வருக, வரைந்த நாள்! என,
நல் இறை மெல் விரல் கூப்பி,
இல் உறை கடவுட்கு ஆக்குதும் பலியே' (அக. 282:16-18)

என்பது தோழியின் கூற்று. இதனாலும் மகளிர் தத்தம் மனைகளில் இல்லுறை தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வந்தமை தெளிவாகத் தெரியவருகிறது.

இல்லத்தில் மகளிர் வணங்கி வந்த தெய்வத்துள் ஒன்று பாவை என்பது. இது சுவரில் ஓவியமாகத் தீட்டப் பெற்று வழிபடப் பெறுவது ஆகும். இதற்குப் பலி முதலியன படைத்து மகளிர் வழிபடுவர். தலைவி ஒருத்தி உடன்போக்கு ஒழுக்கத்தால் தலைவருடன் சென்று விடுகிறாள். அவளைப் பிரிந்த செவிலித்தாய் மகளின் பிரிவால் மனையில் நேர்ந்துள்ள துயரங்களைப் பேசுமிடத்துத் தலைவி வளர்த்த கிளி பால் உண்ணாதிருத்தலும், அவளுடைய தோழியர் விளையாடாது மடிந்திருத்தலும், தாழிகள் புதுமலர் பெறாது வாடியிருத்தலும் கூறி, அம் மனைச் சுவரிடத்திலுள்ள பாவைத் தெய்வமும் இவள் பிரிவால் பலியைக் கொள்ளவில்லை என்கிறாள்.

'ஒண் தொடி செறித்த முன்கை ஊழ் கொள்பு,
மங்கையர் பல பாராட்ட, செந்தாரக்
கிள்ளையும் தீம்பால் உண்ணா; மயில் இயல

சேயிழை மகளிர் ஆயமும் அயரா;
தாழியும் மலர்பல அணியா; கேழ் கொளக்
காழ் புனைந்து இயற்றிய வனப்பு அமைநோன் சுவர்ப்
பாவையும் பலி எனப்பெறாஅ, நோய் பொர
இவை கண்டு இனைவதன் தலையும், நினைவிலேன்,
கொடியோள் முன்னியது உணரேன் ...' (அக. 369:2-10)

என்பது மகட்போக்கிய செவிலித்தாயின் பேச்சு. இங்கே மகள் மனையிலிருந்து பிரிந்த வருத்தம் ஓரளறிவுயிராகிய தாழியின் மலர் முதல் சுவர்ப்பாவைத் தெய்வம் வரையில் சென்றமையை வெளியிடுகிறாள். சுவர்ப்பாவை பல் வண்ணத்தால் மிகவும் அழகுடையதாக விளங்கியமையும், அது மனையில் வணக்கத்திற்குரிய தெய்வமாக நிலை பெற்றமையும், 'கேழ் கொள' காழ் புனைந்து இயற்றிய, வனப்பு அமை' நோன் சுவர்ப் பாவையும் பலி எனப் பெறா, என்பதனால் விளங்கக் காணலாம்.

மனையில் விளங்கும் சுவர்ப் பாவையேயன்றி, மன்றப் பாவை, தெற்றிப் பாவை, அல்லிப் பாவை, கொல்லிப் பாவை எனப்படும் பாவைத் தெய்வங்களும், மகளிர் விளையாட்டில் அமைந்த 'தாது செய் பாவை; 'வண்டற் பாவை', 'பைஞ்சாய்ப் பாவை, 'மணலின் எழுதிய பாவை' எனப் பல விளையாட்டுப் பாவைகளும் ஆக வேறு பல பாவைகளையும் சங்கப் பாடல் களில் காண்கிறோம். இவற்றை அடுத்துவரும் 'பாவை' என்னும் தலைப்பின் கீழ்ப் பார்ப்போம்.

## பல்வகைப் பாவை

பாவை என்பது சிறுபெண்களின் விளையாட்டுக்குரிய பொம்மையைக் குறிக்கும். பாவையும் பந்தும் அவர்களுடைய விளையாட்டுப் பொருள்களில் முக்கியமானவை. 'இது என்பாவை' (ஐங். 375:1) 'பந்தும் பாவையும்' கழங்கும் எமது ஒழித்தே' (ஐங். 358:3) என வருவன இதற்குச் சான்றாம். இது,மரம், மண், கல், உலோகம் முதலியவற்றால் செய்யப்படுவ தாம். 'செய்வுறு பாவை அன்ன என் மெய்' (குறு. 195:6-7) 'வரிப்புனை பந்தொடு பாவை தூங்க' (முருகு.68) என்பனவற்றால் வினைஞர்களால் அழகுறக் கைபுனைந்து இயற்றப்படுவது பாவை என்பது போதரும், 'வழு அறு மரனும் மண்ணும் கல்லும் எழுதிய பாவையும் (மணி. 21:115-116) என மணிமேகலை பாவை செய்யப்படும் பொருள்களைக் குறித்தலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தாகும்.

சிறந்த பொன்னாலும் பாவை செய்வது உண்டு.
'செந்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை
செய்யர் ... ... ... ... ... (மதுரை : 410-412)

'தாஇல் நன்பொன் தைஇய பாவை
விண் தவழ் இளவெயிற் கொண்டு நின்றன்ன
மிகு கவின் ...' (அகம். 212 : 1-3)

என வருவன மகளிரின் மேனியழகிற்கு இளவெயிலின் ஒளி பொருந்தப்பெற்ற பொற்பாவையை ஒப்புக்கூறும் பகுதிகளாம்.

விளக்கினை ஏந்தி நிற்கும் முறையில் பாவையை அமைத்து மாடங்களில் வைத்து விளக்கு ஏற்றுதலும் உண்டு. அந்நாளில் யவனர்களால் தொழில் திறம்பட இயற்றப்பட்ட பாவை விளக்குகள் மன்னர் முதலியோரின் மாளிகையில் ஒளி செய்து விளங்கின.

'பாவை விளக்கின் பரூஉச் சுடர் அழல
இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து (முல்லை 85-86)

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கைஏந்து ஐஅகல் நிறைய நெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர்எரி,
அறுஅறு காலைதோறு, அமைவரப் பண்ணி
பல்வேறு பள்ளிதொறும் பாய்இருள் நீங்க'
(நெடுநல். 101, 105)

இப் பகுதிகள் நமக்குப் பாவை விளக்கின் பயன்பாட்டினைப் புலப்படுத்துகின்றன.

தவிரவும் சித்திரக்காரிகள் பல வண்ணங்கள் கொண்டு சுவரில் பாவை வடிவம் தீட்டுதலும் உண்டு. இங்ஙனம் தீட்டும் சுவர்ப்பாவைகள் இல்லத்திலும் மன்றங்களிலும் தெய்வங்களின் பொருட்டு எழுதப்படுவனவாம்.

'வல்லோன் தைஇய வரிப்புனை பாவை
முருகு இயன்றன்ன உருவினை ஆகி (மதுரை 723-724)

'காழ் புனைந்து இயற்றிய வனப்புஅமை நோன்சுவர்ப்
பாவையும் பலிஎனப் பெறாஅ' (அகம். 369;6 8)

'தாய் உயிர் பெய்த பாவை போல' (கலி. 22;5)

இவை எல்லாம் சுவரில் புனையப் பெற்ற சித்திரப் பாவையைப் பற்றியனவாம்.

சுவர்ப்பாவைகளுள் அல்லியம் என்னும் கூத்தாடும் அழகை ஒப்பப் புனையப் பெற்ற பாவைச் சித்திரத்தை 'அல்லிப் பாவை' என்று புறநானூறு கூறுகிறது.

'வல்லோன் தைஇய வரி வனப்பு உற்ற
அல்லிப் பாவை ஆடு வனப்பு ஏய்ப்ப
காம இருவர் அல்லது, யாமத்துத்
தனிமகன் வழங்காப் பனிமலர்க் காவின்
(புறம். 33:16-19)

இங்கே அல்லிப் பாவையின் ஆடுவனப்பு சிறப்பித்துப் பேசப் படுகிறது.

பதுமை போன்று இயற்கையில் மரம் முதலியவற்றின் தோன்றும் பூ முதலியவற்றையும் 'பாவை' என்று குறிப்பிட்டுள்ளனர். இயற்கைத் தோற்றத்தில் காணும் இவ்வகைப் பாவைகள் 'செய்யாப்பாவை' என்னும் தொடரால் மனிதரால் செய்யப்படாமல் இயற்கை வழங்கும் காட்சி சுட்டிக்காட்டப் படுகிறது. குரவ மரத்தின் பூவும் இஞ்சியின் கிழங்கும்பாவை போன்ற தோற்றமுடையனவாம்.

'நறும் பூங்குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே' (ஐங். 344 : 2- 3)

'செய்யாப் பாவை வளர்ந்து கவின்முற்றிக்
காயம் கொண்டன இஞ்சி, (மலைபடு 125 126)

என்பவை குரவம் பாவை, இஞ்சிப் பாவை பற்றித் தெரிவிக்கின்றன.

தவிரவும் கண்ணாடியுள் தோன்றும் எதிர்வடிவாகிய நிழலுருவமும பாவை என்றே குறிக்கப்படுகின்றது. தன்னை அடுத்த பொருளின் சாயையைக் காட்டும் கண்ணாடியில் தோன்றும் உருவத்தை 'ஆடிப்பாவை' என்பர். காதற் பரத்தை ஒருத்தி தலைவனைப் பற்றிப் பேசுமிடத்து அவன் தன்னுடைய மனைவி சொற்படியே நடக்கின்றமை ஆடிப் பாவையின் காட்சியை ஒத்தது என்று கூறுகின்றாள்.

'கழனி மாஅத்து விளைந்து உகுதீம்பழம்
பழன வாளை கதூ உம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறித் தம்இல்

கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே' (குறுந். 8)

மகளிர் தம் விளையாட்டில் பவைகளைக் கொண்டு விளையாடுவதன்றித் தாமே கோரை முதலிய பொருள்களால் ஆன பாவையும் கொண்டு விளையாடுவர். பைஞ்சாய்க் கோரையினால் அவர்கள் பாவை செய்து விளையாடும் வழக்கத்தையும் சங்கப்பாடல்கள் சிலவற்றில் காணுகிறோம்.

'பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும், (குறுந். 276 : 1-2)

'ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே' (ஐங். 155 : 4-5)

பஞ்சாய்க் கோரையினாலான பாவை தலைவனால் செய்யப் பெற்று தலைவிக்குக் கொடுக்கப்படுதலையே இப் பாடற் பகுதிகளில் காண்கிறோம்.

கையில் எடுத்து மகளிர் பாராட்டி விளையாடுவதற்கு ஏற்ற பாவைகள் ஒருபுறம் இருக்க, அம் மகளிர் வண்டல் மண்ணின் கூடி விளையாடும்போது, அம் மணலால் பாவை உருவம் சமைத்தும் விளையாடுவர். இதனை வண்டற் பாவை என்பர்.

'மாதர் மடநல்லார், மணலின் எழுதிய
பாவை சிதைத்து' என அழ, ஒருசார்.' (பரி. 7 : 25 - 26)

இது வையை யாற்றங்கரை மருங்கில் மணற்பாவை புனைந்து விளையாடிய மகளிர் செயலைக் குறிப்பிடுகிறது.

'நேர் இழை மகளிர் வார் மணல் இழைத்த
வண்டற் பாவை' (நற் 191 : 2 - 3)

என்பது நற்றிணை. வண்டற் பாவைக்குப் பூக்கள் முதலியவற்றை அணிதலும், பூந்தாது முதலியவற்றால் அழகு செய்தலும் உண்டு.

'தாதின் செய்த தண்பனிப் பாவை' (குறுந் : 48:1)
தாது செய் பாவை' (அகம். 392 : 5)

என்பன மகரந்தம் முதலியவற்றாலும் மணற் பாவை அழகுறுத்தப் பெற்றதைப் புலப்படுத்தும்.

'அரி மயிர்த் திரள் முன்கை
வால் இழை மட மங்கையர்
வரி மணல் புனை பாவைக்குக்
குலவுச் சினைப் பூக் கொய்து
தண் பொருநைப் புனல் பாயும்
விண் பொரு புகழ், விறல் வஞ்சி' (புற. 11:1 - 6)

என வரும் புறப்பாட்டுப் பகுதியில் வஞ்சி மகளிர் ஆன்பொருநை நதித் துறையில் பாவை இழைத்து விளையாடிய காட்சியைச் சிறப்பிக்கிறது. இங்ஙனம் நீர்த் துறைக்கண் மகளிர் பாவை செய்து விளையாடுதலை,

'நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய,
பொய்கை சூழ்ந்த பொழில் மனை மகளிர்
கை இசைப் பாவை துறைக்கண் இறுக்கும்
(அகம். 181:16 - 19)

என்னும் அகநானூற்றுப் பாடற் பகுதியாலும் அறியலாகும்.

மகளிர் விளையாடும் பாவை அவர்தம் மனைகளில் வழிபடப்பெறும் பாவையை ஒப்ப அமைவன போலும். மனைத் திண்ணைகளிலும் பாவைகள் தொழுதற்குரியனவாய் அமைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளில் பொருந்தி விளங்கும் பாவை போல மணல் மேடுகளில் அம் மகளிர் அமைக்கும் பாவையையும் நன்கு பாதுகாக்கின்றனர்.

'தெற்றிப் பாவை திணிமணல் அயரும்
மென்தோள் மகளிர் நன்று புரப்ப' (புறம். 283:12 - 13)

எனவரும் புறப்பாட்டு 'தெற்றிப் பாவை' பற்றிக் கூறுகிறது.

ஊர்களில் மக்கள் கூடும் மன்றங்களிலேயும் ஒரு பாவைத் தெய்வம் உண்டு. இதுவும் வண்ணம் தீட்டி அமைக்கப் பட்டதாகும். பகைவர் படையெழுச்சியின் காரணமாகக் குடி பெயர்ந்த ஓர் ஊரின் மன்றில் உள்ள பாவையைப் போற்றுவார் இல்லை. அது மழையில் இளகியும் வெயிலில் காய்ந்தும் வேலைப்பாடுகள் அழிந்தும் அழகிழந்த தோற்றத்துடன் உள்ளதாம். இவ்வாறு குடிபெயர்ந்து மக்களே இல்லாத ஓர் ஊரின் மன்றப் பாவையை அகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

'முனைப் புலம் பெயர்த்த புல்லென் மன்றத்து,
பெயல் உற நெகிழ்ந்து, வெயில் உறச் சாஅய்,

வினை அழி பாவையின் உலறி,
மனை ஒழிந்திருத்தல் வல்லுவோர்க்கே'
(அகம். 157:11-14)

என்பது கவிஞர் வாக்கு.

பாவைத் தெய்வங்களிலே 'கொல்லிப்பாவை' என்பது புலவர் பலராலும் பெரிதும் போற்றி உரைக்கப்பட்டுள்ளது. இது சேர மன்னனுக்குரிய கொல்லி மலையின் மேல்புறத்தில் அமைந்திருந்ததாம். இம் மலை முதலில் வல்வில் ஓரிக்கும், பின்சேரமானுக்கும் உரிமைப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இம் மலைப் பகுதி மிகுந்த அச்சம் தருவதாம். இங்கே உள்ள பாவைத் திருவுரு தெய்வத்தால் எழுதி வைக்கப்பட்டது; மிக்க அழகு வாய்ந்தது. மகளிரின் அழகுக்கு இப் பாவையை ஒப்புக் கூறுவது புலவர் மரபு.

'வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந்தனளே' (குறு. 100:5-6)

'— வென்வேற்
களிறு கெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறு நீர் அடுக்கத்து வியல் அகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅயோளே' (அக. 62:12-16)

'செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லி,
நிலை பெறு கடவுள் ஆக்கிய
பலர் புகழ் பாவை அன்ன நின் நலனே'
(அக. 209:15-17)

'பெரும் பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லி
கருங்கட் டெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்னஇம்
மெல்இயல் குறுமகள் (குறுந். 89:4-7)

'இரவலர் மெலியாது ஏறும், பொறையன்
உரை சால் உயர்வரைக் கொல்லிக் குடவயின்,
அகல்இலைக் காந்தள் அலங்குலைப் பாய்ந்து,
பறவை இழைத்த பல்கண் இறாஅல்
தேனுடை நெடுவரை. தெய்வம் எழுதிய
வினைமாண் பாவை அன்னோள்' (நற். (185:6-11)

'பயம் கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிது இயல் பாவை

விரிகதிர் இளவெயில் தோன்றியன்ன நின்
ஆய் நலம் உள்ளி வரின்' (நற். 192:8-11)

'செவ்வேர்ப் பலவின் பயம் கெழு கொல்லித்
தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங் கோட்டு,
அவ்வெள் அருவிக் குடவரை யகத்து,
கால் பொருது இடிப்பினும் கதழ் உறை கடுகினும்
உரும் உடன்று எறியினும் ஊறு பல தோன்றினும்
பெரு நிலம் கிளரினும், திருநல உருவின்
மாயா இயற்கைப் பாவையின்,
போதல் ஒல்லாள் என் நெஞ்சத்தானே' (நற். 201:5-12)

பூதம் என்னும் தெய்வத்தால் எழுதி அமைக்கப்பட்ட பாவையாதலின் இதற்கு எவ்வகை இடையூறும் நேருவதில்லை. காற்றும் மழையும் இடியும் வெயிலும் எதுவரினும் இக் கொல்லிப் பாவையின் அழகு கெடுவதில்லை. அழகிய பெரிய அத் தெய்வத் திருவுரு பூமி நடுங்கினாலும் ஊறுபடுவதில்லை யாம். இத்தகைய தெய்வப் பாவையை, 'திருநல உருவின் மாயா இயற்கைப் பாவை' என்று போற்றுகின்றார், கவிஞர். எனவே, இப் பாவையின் எழில் நலம் மாதர் நலத்துக்கு ஒப்பிடப் பெறுதல் எங்கும் காணலாம்.

தவிரவும், 'பாவை' எனக் கொல்லி என்னும் அடையின்றி மகளிர்க்கு ஒப்புக் கூறப்பட்டினும், அது கொல்லிப் பாவையையே குறிப்பதாகப் பண்டை உரையாசிரியர்கள் கருதுவாராயினர்.

'ஓவத்து அன்ன இடனுடை வரைப்பின்
பாவை அன்ன குறுந்தொடி மகளிர் (புறம். 25 : 1-2)

என்பதற்குப் பழைய உரைகாரர்,

'ஓவியம் போலும் அழகினை உடைத்தாகிய இடமுடைய இல்லின்கண், கொல்லிப்பாவை போன்ற வடிவினை உடைய சிறு வளை அணிந்த மகளிர்'

என்று உரை எழுதுகின்றார். இதனைத் தழுவியே இக்கால உரையாசிரியர்களும், இம மாதிரி வருணனை வரும் இடங்களில் உள்ள பாவையைக் கொல்லிப் பாவை என்று கொள்ளு கின்றனர். அவற்றுள் ஒரு சில இடங்கள் வருமாறு :

'ஓவத்து அன்ன வினைபுனை நல்இல்,
பாவை அன்ன பலர் ஆய் மான் கவின்
பண்டையின் சிறக்க என் மகட்கு' (அக. 98 : 11 - 13)

'ஓவத்து அன்ன வினை புனை நல்இல்
பாவை அன்ன நல்லோள் கணவன்' (பதிற். 61 : 3 - 4)

'ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்,
பாவை அன்ன மகளிர் நாப்பண்' (பதிற். 88 : 28 - 29)

'ஓவத்து அன்ன இடனுடைய வரைப்பின்
பாவை அன்ன நிற்புறங் காக்கும்' (நற். 182 : 2 - 4)

'வினை அமை பாவையின் இயல, நுந்தை
மனைவரை இறந்து வந்தனை ...' (நற். 362 : 1 - 2)

'பாவை அன்ன வனப்பினள் இவள்' (நற். 301:6)

'பாவை அன்ன பலர் ஆய் வனப்பின்' (நற். 319:7)

'பாவை அன்ன என் ஆய் கவின்' (ஐங். 221:2)

'பாவை அன்ன நின்துணை' (ஐங். 307:4)

'பாவை அன்ன என் ஆய்தொடி மடந்தை' (ஐங். 389:3)

இங்ஙனமாக மகளிர்க்குப் பாவையை ஒப்புக் கூறும் பகுதிகள் பலவாகச் சங்கப்பாடல்களில் காணப்பெறுதலினாலே 'கொல்லிப் பாவைத்' தெய்வம் அந்நாளில் மிகவும் புகழ்பெற்று விளங்கியது போலும்.

பதினொரு வகையான ஆடல்களுள் பாவையாடல் என்பதும் ஒன்று. இதனைப் பாவைக் கூத்து என்றும் உரைப்பர்.

'செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்'
(சிலப். கடலாடு. 60-61)

என்று பாவையாடலின் இயல்பினை உரைக்கின்றார் இளங்கோவடிகள். பாவையாடல் என்பது செய்யவள் என்று புகழப்படும் திருமகள் யுத்தகளத்திலே அவுணர்கள் போர்க் கோலம் விடுத்து மயங்கிவிழும்படியாக ஆடிய ஆடலாகும். சிலப்பதிகாரத்தில் வரும் இவ் ஆடல் பற்றிய அடிகளுக்கு அடியார்க்கு நல்லலார் பின்வருமாறு உரைவரைகின்றார்.

'அவுணர் செவ்விய போர்செய்தற்குச் சமைந்த போர்க்
கோலத்தோடு மோகித்து விழும்படி கொல்லிப் பாவை
வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்ட
பாவை என்னும் ஆடலும்

இவ் உரைப்பகுதியால் திருமகள் கொல்லிப்பாவை உருவை மேற்கொண்டு அவுணரை மயங்கி விழச் செய்தாள் என்பது கவனிக்கற்பாலது. இதனாலும் கொல்லிப்பாவையின் அழகும் அணங்குந்திறனும் வெளிப்படுதல் காணலாம்.

காவிரிப் பூம்பட்டினத்திலே பண்டு புகழுடன் விளங்கிய ஐவகை மன்றங்களுள் பாவை மன்றம் என்பதும் ஒன்று. இம் மன்றத்தில் உள்ள பாவை அரசனும் அறங்கூறும் அவையோரும் நடுவுநிலைமை தவறி ஒரு சார்பாக நீதி பிழைத்தால் நாவால் உரையாது கண்களில் நீர் சிந்தி அந்த அநீதியை வெளிப்படுத்தும் இயல்புடையதாகும்.

அரசு கோல் கோடினும் அறங்கூறவையத்து
உரை நூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவை நீர் உகுத்துப்
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்

(சிலப். இந்திர. 135-138)

என இப்பாவை மன்றத்தின் இயல்பினைச் சித்திரிக்கின்றார் இளங்கோவடிகள்.

தெய்வம் போற்றும் முறையில் பண்டை மக்கள் கொண்ட மனப்பான்மையை மணிமேகலையிலே வரும் 'கந்திற்பாவை வருவது உரைத்த காதையில் உள்ள ஒரு குறிப்பும் தெளிவாக உரைப்பது காணலாம். மூதூர்களிலும் வீதிகளிலும், தேவர் கோயில்களிலும், மரம் மன்றம் முதலியவற்றிலும் ஆகப் பல இடங்களிலும் கல்லிலும், மரத்திலும், சுவரிலும் தெய்வத்தை நிறுத்தி வழிபட, அவ்வத் தெய்வங்கள் அவ்விடங்களினின்றும் நீங்காது மக்களுக்கு அருள் செய்து விளங்கியமை இங்குக் கூறப் பட்டுள்ளது.

'முடித்து வரு சிறப்பின் மூதூர் யாங்கணும்
கொடித்தேர் வீதியும், தேவர் கோட்டமும்,
முதுமர இடங்களும், முதுநீர்த் துறைகளும்,
பொதியிலும், மன்றமும் பொருந்துபு நாடி,
காப்புடை மாநகர்க் காவலும் கண்ணி,
யாப்புடைத்தாக அறிந்தோர் வலித்து,
மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரிலும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க
ஆங்கு அத் தெய்வம் அவ் இடம் நீங்கா ;
ஊன்கணினார்கட்கு உற்றதை உரைக்கும்'

(மணி. 21:119 - 128)

என்பது சாத்தனார் வாக்கு.

# ஆசிரிய விருத்தமும் கட்டளைக் கலித்துறையும் - (ஓர் ஆய்வு)

வித்துவான் பெ. கு. வரதராசன், எம். ஏ., பி. ஓ. எல்., பி டி.
கிருட்டிணகிரி.

ஓசையை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியம் செய்யுள் யாப்பு வகையினை நான்காகக் குறிக்கின்றது. அவையாவன,

'அகவ லென்ப தாசிரி யம்மே'[1]
'அஃதான் றென்ப வெண்பா யாப்பே'[2]
'துள்ளலோசை கலியென மொழிப'[3]
'தூங்கலோசை வஞ்சி யாகும்'[4]

இனமில்லாத மருட்பாவும் அதன் வகைகளும் இவற்றோடு சேர்தது எண்ணப்படுவதொன்றாகும்.

தொல்காப்பியம் அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவற்றின் சிறப்புகளைப் பொதுவாகக் கூறிக் கலிப்பாவின் வகைகளையும் இனங்களையும் பற்றி விரித்துக் கூறுகிறது.

செய்யுள் இலக்கணம் பற்றி பரந்துபட்ட செய்திகளை விரித்துக்கூறும் தொல்காப்பியம் செய்யுளியலின் இறுதியில்

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
யிழைத்த விலக்கணம் பிழைத்தன போல
வருவ வுளவெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே[5]

என்ற சூத்திரத்தால், 'செய்யுளிடத்துப் பொருள் பெற ஆராய்ந்து தந்திரம் செய்யப்பட்ட இலக்கணத்தின் வழீஇயின் போன்று பின் தோன்றுவனவுளவேல் பின் கூறப்பட்ட இலக்கணத்தோடு திரியாமல் முடித்துக் கோடல் அறிவுடையோரது கடன்'[6] எனக் கூறி முடிக்கின்றது.

இச் சூத்திரத்திற்குப் பேராசிரியர், 'அவை எண்சீர் முதலாயின வரிற் கழிநெடிலடிபாற் சார்த்திக் கோடலும் ஏது நுதலிய முதுமொழியோடு பாட்டிற்கு இயை பின்றியுந் தொடர்படுவனவும் யாப்பென்னும் உறுப்பின்பாற் கோடலும்,

பிறவும் ஈண்டோதாதன உளவெனில் அவையுமெல்லாஞ் செய்யுளிலக்கண முடிபாகு மென்றவாறு' என உரை வகுத்துப் போந்தார்.

தொல்காப்பியத்திற்குப் பிறகு யாப்பிலக்கணத்தில் சீரான பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் சங்ககாலப் புலவர்கள் மேற்கொண்ட பாவகைகள் ஆசிரியப்பாவும் வெண்பாவும், கலிப்பாவுமேயாகும் என்பதை அடியின் சிறப்பினைக் கூறும் 347 - ஆவது சூத்திர உரையில் காணப்படும். 'தலையிடை கடை சங்கத்தாரும் பிற சான்றோரும் நாற்சீரடியால் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையும் செய்தார்'[7] என்ற பேராசிரியர்தம் உரையில் விளங்கக் காணலாம்.

சங்ககாலம் கி. மு. 500 முதல் கி. பி. 100 என டாக்டர். சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் கருதுகின்றார்[8] சங்க காலத்தின் தொகை நூல்கள் கலித்தொகை நீங்கலாக மற்றவை அனைத்தும் பெருமளவு ஆசிரியப் பாக்களினா லானவைகளே. கி. பி 100 முதல் கி. பி. 600 வரையுள்ள சங்க மருவிய காலத்தில்[9] வெண்பா யாப்பில் நூல்கள் பல தோன்றின. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டினுள் முதுமொழிக் காஞ்சி தவிர மற்ற நூல்கள் அனைத்தும் வெண்பா யாப்பில் ஆனவைகளே.

10 அல்லது 11 – ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய யாப்பருங்கலக் காரிகை நால்வகைப் பாக்களையும் அவற்றின் வகைகளையும் இனங்களையும் மிகத் தெளிவாகக் கூறுகின்றது. யாப்பிலக்கணத்தைத் தொல்காப்பியச் செய்யுளியல் கூறுவதைக் காட்டிலும் யாப்பருங்கலக் காரிகை விரிவுபடக் கூறுகின்றது என்பதையும் அவ்வாறு கூறுவதற்கான காரணத்தையும் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், 'தொல்காப்பியச் செய்யுளியல் மிக்க விரிவுடையதே ; எனினும் அதிற் கூறப்பட்ட 'கட்டளையடி' முதலிய சில இலக்கணங்கள் வழக்கொழிந்தன. பிற்காலத்தே பெருவழக்காய பாவினங் களுக்கு அதில் இலக்கணம் இல்லை' எனக் கூறுகின்றார்[10].

ஆக, யாம் எடுத்துக் கொண்ட தலைப்புக்கான செய்தி களை யாப்பருங்கலக் காரிகை கொண்டு சிறிதே ஆய்வோம். யாப்பருங்கலக் காரிகை பாவகைகளையும் இனங்களையும் கீழ்க்கண்டவாறு தெளிவாகக் கூறுகின்றது,

1. வெண்பா - குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா பஃறொடை வெண்பா என்ற வகைகளையும்" வெண்செந்துறை, குறட்டாழிசை[12] வெண்தாழிசை, வெண்டுறை வெளி விருத்தம்[13] ஆகிய இனங்களையும் உடையது.

2. ஆசிரியப்பா-நேரிசை யாசிரியப்பா, இணைகுறள் ஆசிரியப்பா, நிலமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகிய வகைகளையும்[14], ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் ஆகிய இனங்களையும் உடையது[15]

3. கலிப்பா - நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா[16], வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா[17], கொச்சகக் கலிப்பா, தரவு, கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகிய வகைகளையுடையது[18]. கலிப்பாவின் இனமாகக் கலித்தாழிசை, கலித்துறை. கலிவிருத்தம் கூறப்படுகின்றன[19].

4. வஞ்சிப்பா - வகையின்றி வஞ்சித்தாழிசை, வஞ்சி விருத்தம் என்னும் மூன்றினங்களைக் கொண்டதாகும்[20].

இவற்றுள் 'ஆசிரிய விருத்தம்' தொல்காப்பியராலும் அமிதசாகரராலும் குறிப்பிடப்பட்ட ஆசிரியப்பாவின் இனமாகும். இவ்வகைப் பாடல்கள் கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவனவாம்.[21] இவ்விருத்தம் எண்சீர் அடியல்லாது மிக்க சீரால் வந்த அடியாலமைதல் சிறப்புடையதன்று எனவும் காரிகை கூறுகிறது.[22]

இவ்வகைப் பாடல்கள் புலவர் பெருமக்களால் பெரிதும் கையாளப்பட்ட காலத்தை கணித்தல் அரிது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னும் யாப்பருங்கலம் இயற்றிய அமிதசாகரர் காலத்திற்கு முன்னும் இவ்வகைப் பாடல்கள் பழக்கத்திற்கு வந்தனவாதல் கூடும் எனப் பொதுவாகக் கூறினாலும் சங்கம் மருவிய காலத்திலேயே கி. பி. 100 முதல் கி. பி. 600க்குள் ஆசிரிய விருத்தப் பாடல்கள் இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளன என்பதை நாம் காண முடிகிறது.[23]

---

குறளடி வஞ்சிப்பா சிந்தடி வஞ்சிப்பா என இருவகை கொள்வர் ஒரு சாரார்

—பதிப்பாசிரியர்

திருத்தக்கதேவர் இயற்றிய சீவகசிந்தாமணியில் விருத்தப் பாக்கள் நல்ல வடிவம் பெற்றுத் திகழ்தலைக் காணலாம். சிந்தாமணியின் காலத்தை கி. பி. 100 முதல் கி. பி. 500க்குள் அடக்குவர் இலக்கிய வரலாற்றாசிரியர்கள், துல்லியமாகக் குறிப்பிடவியலாமற் போனாலும் சிந்தாமணி, விருத்தப் பாவினால் அமைந்த கம்பராமாயணத்திற்கும் பெரிய புராணத்திற்கும் காலத்தால் முற்பட்டது என்பதை ஒப்பார் எவருமிலர். சைவ நாயன்மார்களாலும் வைணவ ஆழ்வார்களாலும் அருளப் பெற்ற தேவாரப் பதிகங்களும் நாலாயிரம் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் விருத்தப்பாக்களுக்குச் சீரும் சிறப்பும், என்றுமழியாத் தெய்வீக வாழ்வும் தந்தன.

இவைகளுக்குப் பின் தோன்றிய புராணங்களும் இலக்கியங்களும் ஆசிரிய விருத்தங்களினாலானவைகளே. புலவர்கள் தாம் விரும்பிய செய்திகளை இலக்கியச் சிறப்புத் தோன்ற பல்வேறு ஓசை நயங்களுடன் விருத்தப் பாக்களினால் வெளிப்படுத்தினர். இலக்கிய உலகில் ஆசிரிய விருத்தம் தன்னிகரில்லா உயர்ந்த நிலையினைப் பெற்றுத் திகழத் தொடங்கியது. மும்மணிக் கோவை, நான்மணி மாலை, பிள்ளைத்தமிழ் ஆகிய பிரபந்தங்களில் விருத்தப்பா இடம் பெற்று அப்பிரபந்தங்களைச் சிறப்பிக்கின்றன.

அடுத்து நாம் ஆராய வேண்டியதொன்று 'கட்டளைக் கலித்துறை' யாம். கட்டளைக் கலித்துறை யாப்பு தொல்காப்பியத்துள் குறிப்பிடப்படாததொன்று. யாப்பருங்கலக் காரிகையிலும் கட்டளைக் கலித்துறை பற்றிய இலக்கணம் கூறப்படவில்லை. ஆயினும், காரிகையில் ஒழிபியலுக்குப்பின் - பிற்சேர்க்கையில் கட்டளைக் கலிப்பாவிற்கும் கட்டளைக் கலித்துறைக்கும் இலக்கணம் கூறப்பட்டுள்ளது.[24]

யாப்பருங்கலக் காரிகை முற்றிலும்[25] கட்டளைக் கலித்துறை யாப்பினால் அமைந்த நூல் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும், கட்டளைக் கலித்துறை 'பிற்காலத்தே பயின்று வழங்கும்[26] எனக் குறிப்பிட்டுள்ள நாட்டார் உரையையும் நாம் நினைவிற் கொண்டு இவ் யாப்பு வகை நடைமுறைக்கு வந்த காலத்தை ஆய்தல் வேண்டும்.

10- ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிரு பாட்டியல்,

வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பாயுரைப்பதந் தாதித் தொடையே[27]

என, அந்தாதி என்னும் பிரபந்தம் வெண்பாவினாலும் அல்லது கட்டளைக் கலித்துறையினாலும் ஆக்கப்படுவதென அப் பிரபந்தத்திற்கு இலக்கணம் கூறியுள்ளது.

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி வெண்பா யாப்பில் அமைந்தது சேரமான் பெருமாள் நாயனாரின் பொன்வண்ணத்தந்தாதி கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்தது. இவையிரண்டும் பன்னிரு பாட்டியலில் கூறப்பட்டுள்ள அந்தாதி இலக்கணத்திற்கு முன்பு தோன்றிய இலக்கியங்கள்.

கட்டளைக் கலித்துறை பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பட்டினத்தார் அருளிய கோயில் நான்மணி மாலையிலும், எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் அருளிய திருவாரூர் மும்மணிக் கோவையிலும் இடம் பெற்றுள்ளதையும் நாம் காண முடிகிறது.

இவர்களைக் காட்டிலும் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார் அருளிய இரட்டை மணிமாலையிலும் இக்கட்டளைக் கலித்துறை யாப்பு இடம் பெற்றுள்ளது. இரட்டை மணிமாலை என்னும் பிரபந்தம் காரைக்காலம்மை யாருக்கு முன்பு யாரும் செய்ததாகத் தெரியவில்லை. இவ்வம்மையாரின் காலம் 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டின தாக விருக்கலாம் என இலக்கிய வரலாற்றாராய்ச்சியாளர் திரு. மு. அருணாசலம் அவர்கள் கருதுகின்றார்.[28]

ஆகவே, இக்கட்டளைக் கலித்துறை யாப்புவகை ஆறாம் நூற்றாண்டிலேயே வழக்கிலிருந்தது என்பது வெளிப்படை இப்பாடலுக்கு இலக்கணம்,

அடியடி தோறும் ஐஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிறைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே[29]

என்பதாகும்.

இச்சூத்திரத்தின் காலமும் ஆசிரியர் பெயரும் தெரிய வில்லை. ஆயினும் இச்சூத்திரம், 'கட்டளைக் கலித்துறை ஐந்து சீர்களினாலாகிய நான்கு அடிகளையுடையது என்றும், ஒவ்வோரடியிலும் முதல் நான்கு சீர்கள் வெண்பாவிற்குரிய

வெண்சீர் வெண்டளையோ இயற்சீர் வெண்டளையோ பெற்று வருதல் வேண்டும் என்றுப், ஐந்தாவது சீர் - ஒவ்வோரடியின் கடைசிச் சீர் விளங்காயாகி வருதல் வேண்டும் என்றும், நேரசையில் தொடங்கின் அப்பாடலின் ஒவ்வோரடியும் ஒற்று நீக்கிப் பதினாறெழுத்தும் நிரையசையில் தொடங்கின் பதினேழெழுத்தும் பெற்று வருதல் வேண்டும் என்றும் பாடலின் இறுதியடியின் இறுதிச் சீர் ஏகாரம் பெற்று வருதல் வேண்டும் எனவும் தெளிவான தோரிலக்கணத்தைக் கூறுகிறது.

மூவர் மும்மணிக்கோவை அல்லது கண்கண்ட தெய்வங்கள் என்ற நூலிலிருந்து [30] கட்டளைக் கலித்துறைக்கு வகைக்கொரு பாடல் காட்டாகத் தரப்படுகிறது.

நேரசையில் தொடங்கப்பட்ட கட்டளைக் கலித்துறை :-

தந்தையால் பெற்ற உதவிக்குத் தன்னுடல் தோலுரித்துக்<br>
கந்தையே யானாலுங் கட்டாக்கிக் காலில் அணிவதற்குச்<br>
சிந்தையால் ஒப்பிச் செருப்பா யமைந்தாலுஞ் சேய்தனது<br>
தந்தைக்குச் செய்யுங்கைம் மாறெனத் தக்கோர்<br>
கணித்திலரே[31].

நிரையசையால் தொடங்கப்பட்ட கட்டளைக் கலித்துறை :-

அருளொடு தந்தை மகவினுக் காற்றிடுந் தொண்டதுதான்<br>
பொருளும் புகழும் பெறச்செய்வ தல்ல புனிதவாழ்வாம்<br>
இருளுடன் இன்னலு மிற்றிடச் செய்திடுங் கல்வியதைப்<br>
பொருளெனக் கண்டான் பெறச்செய்தான் தெய்வம்<br>
புவியினிலே.[32]

எழுத்தெண்ணிப் பாடப்பட்ட அடிகளைக் கொண்ட பாடல் கட்டளைக் கலித்துறை என்பது புலனாகின்றது. வெண்பா புலவர்க்குப் புலி என்பா - அவ்வெண்பாவிற்குரிய வெண்டளை விரவ ஒவ்வோரடியும் அமைதல் வேண்டும். நோக்குங்கால் ஆசிரிய விருத்தத்தைக் காட்டிலும் கட்டளைக் கலித்துறை யாத்தற் கெளிதன்று.

எளியதொன்றைச் செய்து பெரிதெனப் பேணும் மனவியல்புடைய மாந்தர்க் கூட்டம் அரிய படைப்பினைச் செய்து, அப்படைப்புக்கு எளிதின் பெயரைச் சூட்டுதல் இயல்போ வென்பது நமது ஆராய்ச்சியின் இறுதி நிலை.

அப்பர் தேவாரப் பதிகங்களில் கட்டளைக் கலித்துறை யாப்பிலமைந்த சில பதிகங்கள் திருவிருத்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. நம்மாழ்வார் பாசுரங்கள் கூட —

கட்டளைக் கலித்துறையால் அமைந்த சில, திருவிருத்தம் என்றே அழைக்கப்படுகின்றன.[33] பதினோராந் திருமுறையில் இறுதியில் சேர்க்கப்பட்ட நம்பியாண்டார் நம்பியின் பத்துப் பிரபந்தங்களில் ஒன்று 'திருப்பண்ணியர் விருத்தம்' என்பது. இப்பிரபந்தம் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்த எழுபது பாடல்களைக் கொண்ட ஒரு சிற்றிலக்கியமாகும்.

கட்டளைக் கலித்துறை விருத்தமென அழைக்கப் படுவானேன் என்ற வினாவிற்கு விடைகாண முயலுவோம்.

'கோவை' என்ற பிரபந்தம் கட்டளைக் கலித்துறை யாப்பிலேயே அமைதல் வேண்டுமென்ற விதியினை வச்சணந்தி மாலை வெண்பாப் பட்டியல் கீழ்வரும் தொடரால் குறிப்பிடுகின்றது.

'ஆய்ந்த கலித்துறைதான் நானூற் றகப்பொருண்மேல்
வாய்ந்தநற் கோவையாம்'[34]

இப்பாவகையால் அமைந்த கோவைகளுள் எதுவுமே விருத்தம் என்ற பெயரால் அழைக்கப்படுதலில்லை. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிறகு அடியார்கள் தம் அருள் வாக்காலமைந்த கட்டளைக் கலித்துறைப் பாடல்களே விருத்தமென அழைக்கப்பட்டன. பின் 11- ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி, கட்டளைக் கலித்துறையால் தாம் பாடிய பிரபந்தத்தினைக் 'கோயில் திருப்பண்ணியர் விருத்தம்' என்று பெயரிட்டு அழைத்து மகிழ்ந்தார். அவர் காலத்திற்குப் பின் விருத்தம் என்ற பெயரால் கட்டளைக் கலித்துறை யாப்பாலமைந்த நூல்கள் ஏதும் வெளிவரவில்லை.

ஆகவே, 6- ஆம் நூற்றாண்டுக்கும் 11- நூற்றாண்டுக்கும் இடையில் சில அடியார்களால் அருளப் பெற்ற கட்டளைக் கலித்துறைப் பாடல்களே விருத்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. ஈண்டு விருத்தம் என்பது பாவகையினைக் குறிக்காது புதுமையினைக் குறிக்கும் எனக் கொள்ளுவது பொருத்துவதாகும்.

யாப்பு வகையில் பல்வேறு வகையான பாக்களை யாத்து மகிழ்ந்த புலவர் பெருமக்களும், சைவ வைணவ அடியார்களும் புதுமைகாண விரும்பினர். புதிய யாப்பு வகையாலான கட்டளைக் கலித்துறைப் பாக்களைப் பாடினர். புதுமை என்ற

பொருள்தரும் விருத்தம் என்ற பெயரைச் சூட்டினர். விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருளுடையது. வருந்து-வருத்தம் ; பொருந்து - பொருத்தம் - இத்தகையதே விருந்து-விருத்தம் ஆயிற்று[35]. ஆகவே, கட்டளைக் கலித்துறை யாப்பிற்கு அமைந்த வேறு பெயரான விருத்தம் என்பது பாவகையினைக் குறிக்காது புதுமை என்ற பண்பினையே குறிக்கும் எனக் கொள்ளுதல் தகும்.

எவ்வாறாயினும் ஆசிரிய விருத்தமும் கட்டளைக் கலித் துறையும் தத்தம் சிறப்பிற் குறையாது ஓசை நயமும் இலக்கிய வளமும், பக்திச் சுவையும் பெற்று இலக்கிய நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இலக்கிய உலகில் நிலைபெற்று வாழ்கின்றன.

**ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூல்கள் :**

1. அருணாசலம். மு இலக்கிய வரலாறு (பதினோராம் நூற்றாண்டு) மு. ப. பாரி நிலையம், சென்னை-1

2. சுப்பிரமணியம் எஸ். வி. மொழிக்கட்டுரைகள்.

3. தொல்காப்பியம்–பொருள்–செய்யுளியல்

4. பதினோராந் திருமுறை - திருப்பனந்தாள் மடத்து வெளியீடு - 7-2-63

5. பாலசுப்பிரமணியன் சி. பா. இலக்கிய வரலாறு ம. ப. டிசம்பர் 1976 பாரி நிலையம் -59 பிராட்வே, சென்னை-1.

6. யாப்பருங்கலக் காரிகை - கழக வெளியீடு சென்னை-1 ம ப. ஆகஸ்ட் 1959,

7. வரதராசன் பெ. கு. மூவர்மும்மணிக்கோவை. மு. ப. 1861 லிட்டரரி பிரஸ் சேலம்-1

8. வெண்பாப் பாட்டியல் - கழக வெளியீடு-;92 ம. ப. ஆகஸ்ட் -1951.

9. வெள்ளை வாரணனார் க. - பன்னிரு திருமுறை வரலாறு பகுதி - 2 அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு- 1963.

**அடிக் குறிப்புகள் :**

1. தொல்காப்பியம் - பொருள் - செய்யுளியல்-சூத்திரம் 393
2. ,, ,, ,, ,, 394
3. ,, ,, ,, ,, 395
4. ,, ,, ,, ,, 396
5. ,, ,, ,, ,, 555
6, ,, சழக வெளியீடு ம. ப. 1959 பேராசிரியர் உரை-பக்கம் 432
7. ,, ,, ,, ,, பக்கம் 176
8. பாலசுப்பிரமணியன் சி. பா. தமிழ் இலக்கிய வரலாறு பக்கம் – 27
9. ,, ,, ,, பக்கம் – 75
10. வேங்கடசாமி நாட்டார் ந. மு. யாப்பருங்கலக் காரிகை சழகப் பதிப்பு ம. ப. ஆகஸ்ட் 1959 முகவுரை · பக்கம் 3.
11. யாப்பருங்கலப்பா – 24; 26
12. ,, – 31
13. ,, – 32
14. யாப்பருங்கலப்பா 34
15. ,, 36
16. ,, 38
17. ,, 40
18. யாப்பருங்கலப்பா ... ... 42
19. ,, ,, ... ... 44
20. ,, ,, ... ... 46
21. ,, ,, 36 - ஆவது பாடலின் உரை - பக்கம் - 95
22. ,, ,, - 95
23. சிலப்பதிகாரம் - கானல் வரிப் பாடல்
24. பிற்காலத்தே பயின்று வழங்கும் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்னும் செய்யுட்களுக்கு இந் நூலில் இலக்கணம் கூறப்படடிலவாதலின் அவற்றின் இலக்கணம் ஈண்டுத் தருதும் - யாப்டருங்கலக் காரிகை - பக்கம் - 199.
25. கட்டளைக் கலித்துறை யாப்பினால் தற்சிறப்புப் பாயிரம் முதல் ஒழிபியல் - செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை வரை உள்ள 59 பாடல்கள்,

26. யாப்பருங்கலக் காரிகை ... ... பக்கம் - 199
27. பன்னிரு பாட்டியல் சூத்திரம் - 212
28. அருணாசலம் மு. இலக்கிய வரலாறு பக்கம் - 292
(பதினோராம் நூற்றாண்டு) மு. ப. ,, 293
பாரி நிலையம், சென்னை - 1.
29. யாப்பருங்கல காரிகை - பிற்சேர்க்கை பக்கம் - 200
30. தாய், தந்தை, குரு ஆகிய மூவரைப் பற்றியும் முறையே ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை, குறள் வெண்பாவாலாகிய முப்பது பாடல்களைக் கொண்ட சிறுபிரபந்தம் இந்நூல் இக்கட்டுரையாசிரியரால் இயற்றப் பெற்று, குடியாத்தத்தில் நடைபெற்ற தமிழகத் தமிழாசிரியர் மாநாட்டில் 1961-இல் டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் அரங்கேற்றப் பெற்றது.
31. மூவர் மும்மணிக் கோவை ... பாடல் - 20
32. ,, ... பாடல் - 11
33. வெள்ளை வாரணனார் க. பன்னிரு திருமுறை வரலாறு
34 வெண்பாப் பாட்டியல்-கழக வெளியீடு 192ம.ப ஆகஸ்ட் 51 பக்கம் - 34
35. சுப்பிரமணியன் எஸ்,வி மொழிக் கட்டுரைகள்-பக்கம்-172.

---

## பதிப்பாசிரியர் குறிப்பு

கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பினை விருத்தம் எனவும் பெயரிட்டு வழங்கினர் என்பது கட்டுரையின் கருத்தாக உளது. யா. காரிகை ஆசிரியர் கலிப்பாவின் இனமாகிய கலித்துறை ஐஞ்சீரான் வருமென்றதல்லது அஃது எழுத்தளவையமைந்து வரின் கட்டளைக் கலித்துறையாமெனக் கூறினாரில்லை. உரையாசிரியரே அங்ஙனங் கூறி அதற்கு "அடியடி தோறும்" என்னும் உரைச் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

தொல்காப்பியர் வெண்பா முதலிய பாக்கள் தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனம் பெறுமென்றோ, விருத்தம் என்னும் ஒரு யாப்பு வகையோ கூறினாரில்லை. "அடி நிமிர் இளவி ஈராறாகும்" என்னும் சூத்திரத்திற்கு இளம்பூரணர் கூறும் உரை பாவினங்களைச் சுட்டுகின்றது. பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் அச்சூத்திரத்திற்கு வேறு விளக்கந் தருகின்றனர்.

தொல்காப்பியர் எழுத்தளவையான் அடி வகுத்துக் கூறியதன்றி அவற்றைக் கட்டளையடி என்று கூறவில்லை. கட்டளை என்னும் சொல்லை அவர் யாண்டுங் கூறினாரில்லை. இளம் பூரணரும் கட்டளையடி என்பது பற்றிக் கூறவில்லை. சமற்கிருத யாப்பு முறையின் வேட்கையால் பேராசிரியர் படைத்து வலியுறுத்தும் கருத்தும் அது.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை முதலிய யாப்பு நூல்கள் யாவும் தொல்காப்பியச் செய்யுள் நெறிக்குப் பெரிதும் மாறுபட்டவை, முரண்பட்டவையாக உள. யாப்பருங்கல உரையாசிரியர் கூறும் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பினை வீரசோழிய ஆசிரியர் சூத்திரமாகக் கூறியுள்ளார் எனினும் அவரும் கட்டளை என்னும் அடைமொழி கூறினாரில்லை. அதனைக் கலித்துறை — திலதக் கலித்துறை என இரு பிரிவாகக் கூறுகின்றார்

நெடிலடி நான்கவை நேர்ந்துநின் றேபதி னாறெழுத்தாய்
முடிவன வாம்பதி னேழு நிரைவரின் முன்மொழிந்த
படிவழு வாது நடைபெறும் ஓசைவண் டேந்திநின்ற
கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி கலித்துறையே
[இதனை உரையாசிரியர் கோவைக் கலித்துறை என்பார்]
(வீரசோ. யா - 18)

நேர்முந் துறிற்பதி னாறெழுத் தாகி நிரை முதலாஞ்
சீர்முந் துறிற்பதி னேழாய் முடிந்து செப் பாரடிகள்
ஏர்முந்து நான் கொத்திருபது சீராலியன் றீடுமேல்
தேர்முந்து பேரல்குன் மாதே அஃது திலதமன்றே
(வீர - யா - 22)

கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்குப்பின் தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் இவை. நம்மாழ்வார் பிரபந்தத்துள் திருவிருத்தம் ஒருபகுதி. திருநாவுக்கரசர் விருத்தம் என்ற யாப்பில் பல பதிகங்கள் பாடியுள்ளார். இவ்விருவரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருளாளர். உரையாசிரியன்மார் வழங்கிய கட்டளைக் கலித்துறையை நோக்கி அதனை விருத்தம் என்னும் பெயராற் கூறியிருப்பாரா எனக் கருதுதல் வேண்டும்.

ஐஞ்சீரடி மண்டில யாப்பமைந்த பாக்களைத் தொல்காப்பியம் கொச்சகக் கலிவகையாகக் கூறுதலன்றி கலித்துறை என்றோ விருத்தமென்றோ கூறவில்லை. ஐந்தாம் நூற்றாண்டினராகக் கருதப்பெறும் காரைக்காலம்மையார் பாடிய இரட்டை மணிமாலையுள் இவ்யாப்பமைந்த பாக்கள் உள. பெயர் கூறப்பட வில்லை. ஆயினுந் திருமுறைகளைத்

தொகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள் அதே யாப்பமைந்த பாக்களைப் பாடி அவற்றிற்குக் கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் ஆளுடையபிள்ளையார்திருச்சண்பை விருத்தம் எனப் பெயரிட்டுள்ளமையான் இவ் யாப்பினை அவர் விருத்த மென்றே கொண்டார் எனத் தெரிகின்றது. இவர் காலம் யாப்பருங்கல நூலுக்குப் பிற்பட்டதென்பதையும் கருதல் வேண்டும்.

இவர் யாவரும் சமய நெறி பரப்பிய அருட்புலவோராவர். அவர் சார்ந்த சைவ வைணவ நெறிகள் வைதிக நெறியில் வந்தவையே. வேத நெறியை விளக்கும் ஆறங்க நூல்கள் சமற்கிருத மொழியால் ஆனவை. அவற்றை அப்புலவோர் பயின்றோ தெய்வீக ஆற்றலாலோ நன்கு அறிந்திருந்தனர் என்பதை அவர்தம் பாக்களே புலப்படுத்தும்.

சமற்கிருத மொழி யாப்பிலக்கணநூல் (பத்தியங்களை) பாக்களைச் சந்தம், விருத்தம், தண்டகம் எனப்பகுத்துக் கூறும்.

தொல்காப்பியங் கூறும் ஒத்தாழிசைக்கலியுள் ஒருவகை தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணவாய் (செய்-133) வண்ணகம் ஒரு போகு என இருவகைத்தாய் வருமென்றும் (செய்-134) அவற்றுள் ஒரு போகு அம்போதரங்க ஒரு போகு கொச்சக ஒரு போகு என இருவகைப்படும் என்றும் (செய்-142) கொச்சக ஒரு போகு ...... யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது. (செய்-143) எனவும் கூறுதலின் கொச்சகக் கலி வகைகள் வடமொழி விருத்தம் தண்டகங்களுக்கு இணையாக உள்ளமை கருதியும் இசையமையப்பாடுதற்கு வாய்ப்பாக உள்ளமை கருதியும் தாம்பாடிய இசைத்தமிழ் பாக்களுக்கு அப்பெயர்களேயே அமைத்துக்கொண்டனர் என்பது யாப்பருங் கல விருத்தியுரையாசிரியருக்கும் வீரசோழிய உரையாசிரி யருக்கும் கருத்தென்பது அவர்தம் உரைகளான் புலப்படு கின்றது நாவுக்கரசர் தண்டகத்தைத் தாண்டகமென்னும் பெயரான் அமைத்துக் கொண்டுள்ளமையும் நோக்கத்தக்கது.

மற்றும் பொருந்து, திருந்து. வருந்து முதலிய தொழிற் சொற்பகுதிகள் பிற வினையாதற்கண் பொருத்து திருத்து வருத்து வன்றொடராய் உடைமைப் பொருள்தரும் அம்விகுதி யொடுகூடிப் பொருத்தம், திருத்தம். வருத்தம் என ஆக்கம் பெறுதற்கு ஏற்கும். மருந்து, பருந்து, முருந்து, விருந்து என்னும் பெயர்ச்சொற்பகுதிகள், வன்றொடராதற்கு ஏற்குமா என்பதும் கருதல் வேண்டும்.

ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## இரண்டு ஐயங்களும் அவற்றின் தெளிவும்

அப்போது மனவிருத்தி (மனத்தின் அறிவு வடிவமான திரிபு) அவ்வறிவுப் பிழம்பின் நிழலைத் தழுவியதாய்ப் புலன்களிற் சென்று உலவாநிற்கும். இவ்விருத்தியே உணர்வு (ஞானம்) எனப்படும்.

மூசையிலிட்டு உலையில் வைத்து உருக்கிய தாரா (பொன் முதலிய உலோகங்களுள் ஒன்று) நீர், அச்சுக் கருவிகளில் வார்த்தபோது அவ்வச்சுக் கருவிகளுக்கு ஒப்பனவான பல உருவங்களானாற் போல, உடல் நடுவினின்றும் கண் முதலிய பொறிகள் வாயிலாக வெளிப்படும் உள்ளத்தின் அறிவு வடிவத் திரிபுகளும் (பரிணாமங்களும்) குடம் முதலிய புலன்களின் ஒத்தவடிவமாய்த் திரிபு (பரிணாமம்) எய்துகின்றன. (அஃதாவது, உள்ளத்தின் அறிவு வடிவத்திரிபுகள் தமக்குரிய புலன்களிற் சென்று அவற்றின் ஒத்தவடிவமாய்த் திரிபெய்தி அவற்றின் மறைப்பைக் கெடுக்கின்றன). அளவிடற்கு அருமையாய் இன்ப துன்பம் முதலிய வடிவப்பயனைத் தருவதற்கு அடிப்படையாயுள்ள அக்குடம் முதலிய புலன்களையெல்லாம் அதிலுள்ள ஒளி நிழல் (ஆபாசன்) ஒளி பெறச் செய்கின்றது.

உள்ளம் திரிபெய்திச் சென்று புலன்களை யடைந்தக்கால் அது அப்புலன்களை மறைத்துள்ள மறைப்பைக் கெடுக்கின்றது. அதனோடு கூடியுள்ள ஒளிநிழல், அவற்றை ஒளிபெறச் செய்கிறது. இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம்.

எங்ஙனம் இருட்டிலுள்ள குடம் முதலிய பொருள்கள், விளக்கும் கட்பொறியும் இன்றிக் காணப்படாவோ, அங்ஙனமே காட்சிப் பொருள்களும் உள்ளத்திரிபும் (விருத்தியும்) அதனொடு கூடியுள்ள ஒளிநிழலும் (ஆபாசனும்) இன்றிக் காணப்படுவதில்லை.

இருட்டிலுள்ள குடம் முதலிய பொருள்கள் விளக்கினாலும் கட்பொறியாலும் அறியப்படுகின்றன. அவ்விரண்டனுள் ஒன்று குறைந்தால் அவை அறியப்படுதல் இல்லை. ஆனால் ஞாயிற்றை (சூரியனை) அறிய வேண்டுமிடத்தோ கண்ணொன்றே போதும். விளக்குத் தேவையில்லை அது போலப் பெயரும் வடிவமுமாய் விரிந்துள்ள உலகத்தை அறியுமிடத்து உள்ளத்திரிபும் (விருத்தியும்), ஒளி நிழலும் (பலம் அல்லது ஆபாசம்) வேண்டும். அவற்றுள் ஒன்று குறைந்தாலும்

அது புலனாகாது; ஆனால் உயிரை (ஆத்மாவை) அறியு மிடத்தோ, இறைவடிவ உளத்திரிபொன்றே (பிரஹ்மாகார வடிவவிருத்தி ஒன்றே) போதும். ஒளிநிழல் (ஆபாசன்) தேவையில்லை.

உள்ளத்திரிபும் (அந்தக்கரணவிருத்தியும்) ஒளிநிழலும் (ஆபாசனும்), சேருந்திரிபே (பரிணாமமே) மனம் என்று சொல்லப்படும். இறையானது (பிரஹ்மமானது) உள்ளதுணர்த் தும் ஆசான், உண்மையுணர்த்தும் நூல்கள் இவற்றை விரும்பும் வகையால் உள்ளத்தினின்று எழாநிற்கும் இறை வடிவத்திரிபிற்கு (பிரஹ்மாகார விருத்திக்கு)ப் புலனாம்; ஒளிநிழலோடு கூடிய (ஆபாசனோடு கூடிய) இம் மனத்திற்குப் புலனாகாது. இறையானது (பிரஹ்மமானது) மனத்திற்குப் புலனாம்; மனத்திற்குப் புலனாகாது என்று கூறப்பட்டதற்கு உண்மைப்பொருள் இதுவாம் என்பதை இப்போது தெளியலாம் அன்றோ!

---

## 10. கூற்றம் உதைக்கும் குறி

பிறவிகளுள் மக்கட் பிறவியே உயர்ந்ததும் சிறந்ததும் ஆகும். ஏன்? தமக்கு வேண்டுவனவற்றைத் தம் முயற்சியால் வேண்டியாங்குப் பெற்று இன்புறவும் தமக்கு வேண்டாதன வற்றை அம்முறையே ஒதுக்கித் தள்ளித் துன்புறவிலிருந்து நீங்கவும் மக்கட் பிறவி எடுத்தவர்களாலன்றி மற்றப் பிறவி களால் ஒல்லுமோ?

இன்பமும் துன்பமும் மாறிமாறி வருதலை மக்கட் பிறப் பெடுத்தவர் அனைவரும் துய்த்து உணர்ந்தவராவர். "இன்பமே என்றும் துய்க்க வாய்ப்புண்டா?" என்றும் "துன்பமில்லாமல் வாழ வழியுண்டா?"—மக்கட் பிறப்பெடுத்தவர்களுள் அறிவில் மேம்பட்டவர்கள் இவ்வாறு அடிக்கடி எண்ணுவர். வாய்ப்புண்டு வழியுண்டு என்று தம் முயற்சியால் துன்பமேயில்லாமல் இன்பமே பெற்று வாழ்ந்து பிறவா நிலை எய்தினவர் கூறிச் சென்றுள்ளனர்.

துன்பமேயின்றி இன்பமேயாய் நிலைபெறும் வழி யாது? காற்றைப் பிடிக்கும் வழியே, என்றும் இன்பமாய் நிலை பெற்றிருத்தற்கு உரிய சிறந்த வழியாகும். கற்றவர், கல்லார்,

உயர்ந்தவர் தாழ்ந்தவர், அறிவுடையர் அறிவற்றார், சிறியவர் பெரியவர் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் கடைப் பிடித்தற்குரிய எளிய வழி ஈதாதலால் இது சிறந்த வழியாகும் எனப்பட்டது.

பிறந்தவர்கள் இறப்பது இயற்கை. ஏன் பிறக்கிறார்கள்? ஏன் இறக்கிறார்கள்? இதற்கு ஒரே விடை, பிறப்பை ஒத்துக் கொள்ளும் எல்லா சமயத்தவரும் கூறும் விடை, வினை என்பதேயாகும் வினைப்பயன் நுகர்வதற்காகப் பிறக்கிறார்கள். வினைப்பயன் நுகர்ந்து முடிந்ததும் இறக்கிறார்கள். பிறப் பென்பது என்று தோன்றியதோ அன்று முதல் ஒவ்வொரு பிறப்பிலும் செய்த வினைப்பயன், அவ்வப் பிறப்பில் நுகர்ந்தது போக எஞ்சி நின்றது உள்ளத்தில்(அந்தக்காரணத்தில்) குவிந்து கிடப்பதாகும். உள்ளத்தில் பதிந்து கிடக்கும் இவ்வினைப் பயன் உள்ளவரையிலும் கூற்றுவனுக்கு பணி உண்டு. அந்த பிறப்பில் நுகர்தற்குரிய வினைப்பயன் தீர்ந்ததும் கூற்றுவன் உயிரைக் கவர்ந்துசெல்வான். மறு பிறப்பில் நுகர்தய்குரிய வினைப்பயன் காரணமாகக் கூற்றுவனால் கவர்ந்து செல்லப் பட்ட உயிர் மறுபடியும் பிறக்கும். இதனால் இறப்பும் பிறப்பும் மாறி மாறி வரும். என்று வினைப்பயன் அனைத்தும் வறண்டு விடுகின்றதோ, அன்று கூற்றுவன் உயிரைப் பிடிக்க வந்தால் அவனை உதைத்துத் திருத்திவிடும் ஆற்றல் உயிர்க்கு உண்டாகும். அன்றுமுதல் இறப்புப் பிறப்பின்றி, என்றும் இன்பமேயாய் நிலைபெறலாம்.

வினைப்பயன், உள்ளத்தில் பதிந்துகிடப்பது. அது செயற் படும்போது உள்ளம் எண்ண அலைகளாக வெளிப்படும். மறப்பும் நினைப்புமாய் வெளிப்படும் உள்ளத்தின் எண்ண அலைகளே மனம் எனப்படும். எண்ணங்களாக உள்ளத்தில் பதிந்து கிடக்கும் பதிவுகளே வாசனைகள் எனப்படும். எண்ண அலைகளாக மனம் வெளிப்படுவதற்குத் தனித்துணையாக நிற்பது பிராணன். இரண்டு மூக்குத் துளைகள் வழியாக இந்தப் பிராணன் வளிக்கால்களாக இரண்டாகப் பிரிந்து வெளியே செல்வதும் உள்ளே வருவதுமாக இடைவிடாமல் செயலாற்றிக் கொண்டிருக்கும். எருவாய் (குதம்) கருவாய் (குய்யம்) என்ற இரண்டிற்கும் இடைப்பட்ட இடத்திலிருந்து ஏறியும் இறங்கியும் இரண்டு கால்களாக இப்பிராணன் மூக்குத் துளைகள் வழியாக இயங்கி நாசமாகும். இந்தக் கால்கள்

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(எ-டு) "நின்னெஞ்சங் களமாக் கொண்டியாம் ஆள
எமக்கெவன் எளிதாகும்"
புனத்துளான் எந்தைக்குப் புகாஉய்த்துக்
கொடுப்பதோ (கலி-108)

"களமாக் கொண்டியாம் ஆள" என ஆசிரியத்தளை பெற்று அறுசீரடி வந்தவாறு காண்க. குற்றியலிகரம் ஒற்றெழுத்தியல்பிற்றாய் நின்றவாறுணர்க.

பிறவும்; மலர்பலி புகவெழ அலர்பலி பணிபுரை நிமிர்தோள் பிணைஇ (கலி 102) என அறுசீரடி முடுகிவந்தது.

சூ. 65 : எழுசீ ரடியே முடுகியல் நடக்கும்

கருத்து : கலியினுள் எழுசீரடி வருமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய நேரடி முன் எழுசீரடி முடுகியலாய் நடக்கும். எனவே கலியினுள் எழுசீரடி வருமென்பதாயிற்று. அது முடுகியலாய் நடக்கும் எனவே அறுசீரடி முடுகிலின்றியும் வருமென்பதும் பெறப்பட்டது.

(எ-டு) தாதுறு முறிசெறி தடமலரிடையிடை
தழுனெ விரிவன பொழில்.

நேரடிமுன் என விதவாமற் பொதுப்படக் கூறியதனான் ஈராக உறுப்பினுள் வருதலும் கொள்ளப்படும்.

சூ. 66 : முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்

கருத்து : ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : எழுசீரடிக்கு முற்படக் கூறப்பெற்ற ஐஞ்சீரடிக்கும் அறுசீரடிக்கும் முடுகியல் நிலை நீக்கார் ஆசிரியர்.

(எ-டு) "வெல்புகழ் உயர்நிலைத் தொல்லியல் துதைபுதை துளங்கிமில்" (கலி-105) ஐஞ்சீரடி முடுகி வந்தது.

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇ" (கலி-குறி-3) அறுசீரடி முடுகி வந்தது.

சூ. 67 : ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினும்
மூவகை அடியும் முன்னுதல் இலவே

கருத்து : மேற்கூறிய மூவகை முடுகியலடிகளும் வாராத பாக்கள் இவை என்கின்றது.

உரை : ஆசிரியப்பாவின்கண்ணும் வெண்பாவின்கண்ணும். மேற்கூறிய மூவகை முடுகியலடிகளும் வருதலில்லை. எனவே நாற்சீரடியே ஒரோவழி முடுகி வருமென்பது பொருட் பேற்றால கொள்க:

(எ-டு) "திருமழை தலைஇய இருள்நிற விசும்பின் (மலைபடு-1) என முடுகி வந்தவாறு காண்க.

இதனானும் முன்னர் (சூ-64) நேரடி என்றது கலியடியையே என்பது பெறப்படும்.

சூ. 68 : ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்
தோற்றம் முச்சீர்த் தாகு மென்ப

கருத்து : முச்சீரடி ஆசிரியத்துள் வருமென்கின்றது.

உரை : ஆசிரியப்பாவினிடத்து ஈற்றயலடியின் தோற்றம் முச்சீருடையதாகுமென்று கூறுவர் புலவர்.

(எ-டு) "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே"
(குறுந்-3)

'தோற்றம்' என்றதனான் எல்லா அடிகளும் நாற்சீரடி யானும் வருமென்பதும் பெறப்படும்.

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃதறிந்தி சினோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே (குறு - 68)

இதனை நிலைமண்டில ஆசிரியமென்றும் முன்னதனை நேரிசையாசிரியமென்றும் இடைக்கால யாப்பிலக்கண நூலார் பெயரிட்டுக் கூறுவர்.

சூ. 69 : இடையும் வரையார் தொடையுணர்வோரே

கருத்து : ஆசிரியப்பாவின் இடையேயும் முச்சீரடி வரு மெனகிறது.

உரை : ஆசிரியப்பாவின்கண் ஈற்றயலடியேயன்றி இடை யிடை முச்சீரடி வருதலையும் பாவினைத் தொடுக்கும் இயல் புணர்ந்தோர் நீக்கார்.

'இடையும்' என்னும் உம்மையை இழிவு சிறப்பாக்கி அதனானே இடையே இரு சீரடி வரினும் ஆம் எனக் கொள்க;

(எ-டு) "சிறியகட் பெறினே எமக்கீயு மன்னே" (235)
என்னுப்புறப்பாட்டினுள்
"நரந்தம் நாறுந் தன்கையால்"
"இரப்போர் கையுளும் போகி"
"அருநிறத் தியங்கிய வேலே" என முச்சீரடிகளும்
"பெரியகட் பெறினே"
"சென்றுவீழ்ந் தன்றவன்" என இருசீரடிகளும்
வந்தவாறு காண்க.

இதனை இணைக்குறளாசிரியம் என்ப இடைக்கால யாப்பிலக்கண நூலோர். இதனான் இறுதிநாற்சீரடிபாயே செந்தூக்காக முடியும் என்பது பெறப்படும்.

சூ. 70 ; முச்சீர் முரற்கையுள் நிறையவும் நிற்கும்

**கருத்து :** கலியினுள்ளும் முச்சீரடி வருமென்கிறது.

உரை : கலிப்பா வகையுள் முச்சீரடி பலவாகவும் நிலை பெறும். உம்மையான் சிலவாக நிற்றலே சிறப்புடைத்தாதல் பெறுதும்.

(எ-டு) "அரிபரிபறுப்பன சுற்றி"
எரிதிகழ்கனிச்சியோன் சூடிய பிறைக்கண்
"உருவ மாலை போலக்
குருதிக்கோட்டொடு குடர்வலத்தன (முல்லைக்கலி
-3) எனவரும்.

பலவும் என்னாது நிறையவும் நிற்குமென்றதனால் கலி யுறுப்பினுள் அம்போதரங்க உறுப்பு முச்சீரடியாய் நிறைந்து நிற்குமென்பதுங் கொச்சகத்துள் ஒருசாரன முச்சீரடியாய் நிறைந்து வருமென்பதும் கொள்க.

(எ-டு) பானிற வண்ணன் நீ
பனிமதிக் கடவுள் நீ
நீல்நிற உருவும் நீ
நிறமிகு கனலி நீ
அறுமுக ஒருவன் நீ
ஆனிழற் கடவுள் நீ
பெறுதிரு உருவும் நீ
பெட்பன பிறவும் நீ

இவ் எட்டும் முச்சீரடி அம்போதரங்கம். இவற்றை இருசீரடியாகக் கொள்வார் பேராசிரியர். அது பொருந்தாமையை அவ்வுறுப்பிலக்கணங் கூறும் வழிக் கூறுதும்.

"மையணி கண்டனை வானோர்
ஐயனை ஆயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணும்
மெய்யனை மேயது வீடே" என்பது யாப்பினுள் வேறுபட்டு வந்த கொச்சக ஒருபோகு இதனை இடைக்காலத்தார் வஞ்சிவிருத்தம் என்ப.

சூ. 71 : வஞ்சித் தூக்கே செந்தூக்கியற்றே

கருத்து : வஞ்சிப்பாவின் முடிபு ஆமாறு கூறுகின்றது.

உரை : இருசீரடியானும் முச்சீரடியானும் வருமென்ற வஞ்சிப்பாக்கள் (தமக்குரிய அடிகளான் முடியாது) முடியுங்கால் ஆசிரியப்பாவினது இயல்பால் முடியும்.

தூக்கு என்பது சீர்களான் நிறைந்து ஓசையறுதிபாக முடியும் அடிகளின் முடிபாகும். "நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே" என்றதனான் நாற்சீரடியினைச் 'செந்தூக்கு' என்பார் இயல்நூலார். நால்வகைப் பாக்களுள் நாற்சீரான் நடைபெறுவன ஆசிரியம் வெண்பா. கலி ஆகிய மூன்றுமேயாம். அவற்றுள் திரிபின்றி நாற்சீரடியான் முடிவது ஆசிரிய மட்டுமேயாதலின் செந்தூக்கு என்பது ஆசிரியத்திற்குரிமையாய் ஆசிரியத்தூக்கு எனவும் பெயர் பெற்று நிற்கும்.

வஞ்சிப்பா தனக்குரிய அடியான் முடிந்து நில்லாமல் ஆசிரியப்பாவிற்குரிய அடியான் அம்முறைமையான் முடியும். அஃதாவது ஈற்றடி நாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய் முடியும். அதனான் "செந்தூக்கியற்றே" என்றார் எனத் தெளிக.

(எ – டு) வாள், வலந்தர மறுப்பட்டன (புறம் 3)
என்னும் வஞ்சிப் பாட்டின் இறுதி
அனையை யாகன்மாறே
"தாயில் தூவாக் குழவிபோல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே"
என முடிந்தமைகாண்க. பிறவும் அன்ன.

சூ 72 : வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்

கருத்து : வெண்பாவீற்று முடியுமாறு கூறுகின்றது.

உரை : வெண்பாவின் ஈற்றடி முச்சீர் கொண்ட அடியாகும். எடுத்துக்காட்டுப் பின்னர்க் காண்க.

இனி ஆகும் என்றதனான் நாற்சீரடியாய் மண்டலித்து வருதலும் கொள்க. இடையே மூச்சீரான் வருதலும் கொள்க. என்பார் நச்சினார்க்கினியர். அவ்வாறு வருவன கலியுறுப்பாகி வரும் கொச்சக வெண்பாவும், வெண்பா நடைத்தாகிய முதுமொழியும் ஆதலன்றிச் செப்பலிசையினவாகிய வெண்பா ஆகா என்க.

சூ. 73 அசைச்சீர்த் தாகும் அவ்வயி னான.

கருத்து : இதுவும் அது.

உரை : மேற்கூறிய வெண்பாட்டீற்றடியின் இறுதிச்சீர் அசைச்சீராய் முடியும்; ஈற்றுச்சீர் என்பது அதிகாரத்தான் வந்தது.

சூ 74 : நேரீற் றியற்சீர் நிரையும் நிரைபும்
சீரேற் றியலும் இயற்கைய என்ப.

கருத்து : இறுதி நிற்கும் அசைச்சீர்களுக்குமேல் நிற்கும் சீர்கள் இவை என்கின்றது.

உரை : நிரையும் நிரைபுமாகிய அசைச்சீர்கள் நேரீற்றியற்சீர் இரண்டனையும் ஏற்றுத் தளைபெற்று இயலும் இலக்கணத்தன, என்று கூறுவர் புலவர்.

எ. டு. நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்
தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை
தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது
ஒருமையிற் றான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. எனத் தேமாவும் புளிமாவுமாகிய இயற்சீரோடு இறுதிச்சீர் தளைத்து முடிந்தவாறறிக.

சூ. 75 : நிரையவன் நிற்பின் நேரும் நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்

கருத்து : இதுவுமது

உரை : நேரும், நேர்புமாகிய அசைச்சீர்கள் தமக்குமேல் நிரைபிற்றுச் சீர்கள் நிற்பின் அவற்றை ஏற்று இயலுதல் வரைவின்று எனக் கூறுவர் மெய்ம் மொழிப் புலவர்.

(எ - டு) பாலொடு தேன் கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்
இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று
படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையா னரசருள் ஏறு. எனவரும்.

மேல் நேரீற்றியற்சீர் எனவும் சீரேற்றியலும் எனவும் விதந்து கூறியாங்குக் கூறாமல் "நிரையவண் நிற்பின்" என்று கூறியதன் கருத்தாவது :

"வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே" எனக் கூறியதனான் நேரீற்றவாகிய வெண்பாஉரீச்சீர்கள் நான்கும் நிரையீறுபோல நிற்க அவற்றொடு நேரும் நேர்பும் தளைத்து முடியும் என்பதனை நினைவுறுத்தலாம்.

(எ-டு) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந் தார் மாட்டு. எனவரும்.

சூ 76 : எழுசீ ரிறுதி ஆசிரியம், கலியே

கருத்து : கலிப்பாவின் இறுதி முடியுமாறு கூறுகின்றது.

உரை : கலிப்பாவினிறுதி (மூன்றும் நான்குமாகிய) ஏழு சீர்களைக் கொண்ட ஆசிரிய அடிகளாலாகும்.

கலி எனப் பொதுப்படக் கூறினும் சுரிதக உறுப்புப் பெற்று வரும் கலிப்பாவிற்கே இம்முடிபு என்பதும் ஏழுசீர் எனப் பொதுப்படக் கூறினும் முச்சீரடியும் நாற்சீரடியுமாகிய ஏழுசீர் என்பதும் ஏற்புழிக்கோடல் என்பதனான் கொள்ளப்பெறும். வஞ்சிப்பாவிற்குக் கூறியாங்குச் செந்தூக்கான் முடியுமெனக்

கூறாது ஏழுசீரிறுதி ஆசிரியம் எனவிதந்தந்து கூறினார். வஞ்சிப்பா மண்டில ஆசிரிய அடியானும் முடியும் கலிப்பா நேரிசையாசிரிய அடிகளானன்றி மண்டில ஆசிரிய அடிகளான் முடியாதென்பது உணர்தற் பொருட்டெடன அறிக. எடுத்துக் காட்டுக் கலிப்பா இலக்கணங் கூறும் வழிக் காட்டுதும்.

சூ. 77 : வெண்பா இயலினும் பண்புற முடியும்

கருத்து : இதுவுமது.

உரை : கலிப்பாவின் இறுதி நேரிசையாசிரியடிகளான் முடிதலேயன்றி வெண்பா முடியும் இயல்பானும் பண்புற முடியும்.

சீரும் தளையும் ஓசையும் வழுவாது வரல் வேண்டு மென்பார் பண்புற முடியும் என்றார். இம்முடிபு நால்வகைக் கலிப்பாவிற்கும் ஒக்கும். எடுத்துக்காட்டுக் கலிப்பா இலக்கண உரை கூறும் வழிகாட்டுதும்.

சூ. 78 : எழுத்து முதலா ஈண்டிய அடியிற்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

கருத்து : நிறுத்த முறையானே 'யாப்பு' என்னும் உறுப்பினது இலக்கணம் கூறுகின்றது.

உரை : அறம் முதலாய பொருள்களுள் தாம் உணர்த்தக் கருதியவற்றைச் செய்யுளாக யாத்து உணர்த்தும் யாப்பறி புலவோர், எழுத்தும் அசையும் சீரும் உறுப்பாக ஓசையொடு நிறைந்த அடியின்கண் ஏழுதிணை பற்றி வரும் அகமும் புறமு மாகிய பொருளைத் தெற்றெனத் தோன்றுமாறு அதன்கண் முழுமையாக நாட்டுதலை 'யாப்பு' என்னும் உறுப்பென்று கூறுவர்.

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி"

என்றதனான் "மாத்திரை" அவற்றுள் அடங்குதலின் மாத்திரையை விதந்து கூறாராயினார்.

ஆயின் 'அசை' யெனவே எழுத்து அதனுள் அடங்காதோ? எனின் "உயிரில் எழுத்தும் எண்ணப்படா" என்றதனான் ஐயம் தோன்றுமாதலின் அடங்காது. பொருளுணர்ச்சிக்கு எல்லா எழுத்தும் காரணமாதலின் எழுத்தினை விதந்து கூறினார் என்க.

(எ - டு) பாட்டுந் தொகையுமாக வழங்கும் சான்றோர் இலக்கிய மெல்லாம் கொள்க.

சூ. 79: பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்.

கருத்து: ஏழுவகை இலக்கியத்திலும் வழங்கும் வழக்கு மேற்கூறிய யாப்பின் வழியது என்கின்றது.

உரை: பாட்டும் உரையும் நூலும் வாய்மொழியும், பிசியும், அங்கதமும் முதுசொல்லும ஆகிய அவ் ஏழு வகை இலக்கியத்தின்கண்ணும் வண்மையாற் புகழ் சான்ற வேந்தர் மூவரின், தண்ணிய உலகத்தினிடத்து வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரியாறும் கிழக்கும் மேற்கும் கடலுமாகிய நான்கு பெரிய எல்லைக்குள் வாழும் தமிழ்ச் சான்றோர்கள் வழங்கும் செய்யுள் வழக்கு மேற்கூறிய யாப்பின் வழியதாகும் என்று கூறுவர் புலவர்.

புலனெறி வழக்கம் சான்ற தமிழ் மக்கள் வழங்கும் செய்யுள் வழக்கெல்லாம் யாப்பின் வழிப்பட்டு ஏழுவகையாக வழங்குவனவேயாம் என்பது கருத்து.

இது செய்யுள் இலக்கணம் கூறும் இயலாகலின் வழக்கென்றது செய்யுள் வழக்கென்பது போதரும்.

பாட்டென்பதனுள் பாவும் அடங்கும். பாட்டாவது அறமுதலாகியமும் முதற்பொருளைப் பயனாகக் கொண்டு அகமும் புறமுமாகிய பொருளைத் தழுவி மாத்திரை முதலாய செய்யுளுறுப்புக்களுள் வேண்டுவன பெற்று நிகழும் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் என்னும் அறுவகையினதாகும்.

உரைமுதலாகிய ஆறும் அவற்றிற்குரிய இலக்கணம் கூறும் வழி விளக்கப்பெறும்.

வண்புகழ்: கொடையான் வரும் புகழ். இதனை "ஈதல் இசைபட வாழ்தல்" என்பதனானும் அறிக.

மூவராவார் = சேர சோழ பாண்டியர் இதனைப் "போந்தைவேம்பே ஆரெனவரூஉம் மாவருதானையர் மலைந்த பூவும்" என்பதனான் அறிக. இவர்கள் உலகின் தொல்பெருங் குடியினராதலின் உலகம் அவர்க்கு உரியதாயிற்று.

பொழில் — நில உலகம். அஃதாவது ஞாலம் தான் சுழன்றுபொழுதினை உண்டாக்குவதால் அப்பெயர்த்தாயிற்று. பொழுதினைச் செய்வது பொழில். கடலாற் சூழப் பட்டிருத்தலின் தண்மை இயற்கை அடையாயிற்று.

வரைப்பு — வரைந்து கொள்ளப்பட்ட நிலம். திசை நான்காதலின் எல்லையும் நான்காயிற்று. வழக்கென்பது அவாய் நிலையான் வந்தது. வழங்கும் வழக்கு எனக் கட்டி உரை கொள்க.

தமிழ் மொழியின் செம்மையும் தமிழ் மக்களின் சால்பும் தமிழ் வேந்தரின் தொன்மையும் தன்மையும் புலப்பட

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பேரெல்லை யகத்தவர்" எனத் தன்பெருமிதம்

தோன்றக் கூறினார். இதனான் தமிழக வரலாறும் தொல் காப்பியத்தின் தொன்மையும் உய்த்துணரப்படும்.

சூ. 80 : மரபே தானும்
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று.

கருத்து : நிறுத்தமுறையானே 'மரபு' என்னும் செய்யுளுறுப் பாமாறு கூறுகின்றது.

உரை : செய்யுட்கே உரிய உறுப்பாகிய மரபு என்பதுதான் இயற்சொல் முதலாகிய நால்வகைச் சொற்கள் இயங்கும் இயல்பான் மேற்கூறிய யாப்பின்கண் தோன்றுவதாகும்.

எழுவகைச் செய்யுளும் சொற்களைக் கருவியாகக் கொண்டு நிகழ்தலின், "நாற் சொல்லியலான்" என்றார்.

எனவே நால்வகைச் சொற்களையும் வழுவின்றி அமைக்கும் முறைமை மரபென்னும் செய்யுள் உறுப்பாயிற்று என்க. இதனை

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே" என்பதனானும்

இருதிணை ஐம்பால் இயல் நெறிவழாமைத்
திரிவில சொல்லொடு தழாஅல் வேண்டும் (மரபியல்-91)

என்பதானும் அறிக.

தான் என்பது சிறப்புணர்த்தி நின்றது.

பெயர் வினை இடையுரி என்பவை இயற்சொல் முதலிய நான்கினது இலக்கணப் பாகுபாடாதலின் அவை வேறாகா. வடசொல் என்பது தமிழின் ஒரு கூற்றுச்சொல். இதனை ஆரியத்தொடொக்குந் தமிழ்ச்சொல் என்பார் உரையாசிரியர். பிற விளக்கங்கள் சொல்லதிகார உரையுள் கூறப்பெற்றன.

மரபு நாற்சொல்லியலான் யாப்பு வழிப்படுமாறு :-

''பூத்த கரும்பின் காய்த்த நெல்லின், கழனியூரன்'' (ஐங் 4)
கயலார் நாரை போர்விற் சேக்கும் (ஐங் - 9)
வெல்போர்ச் சோழர் ஆமூ ரன்னஇவள்
நலம்பெறு சுடர்நுதல் தேம்ப'' (ஐங் - 56
உருமிசைப் புணரி உடைதரும் துறைவற்கு (ஐங் - 351)
வெள்வசிப் படீஇயர் மொய்த்த வள்பழீஇக்
கோள் நரிக் கொண்ட கொள்கை'' (நற் - 83)
புள்ளொலி மணிசெத்தார்ப்ப
விளிந்தன்று மாதவர்த் தெளிந்த வென்னெஞ்சே
(நற் - 178)
ஓவுக்கண் டன்ன இல்வரை யிழைத்த
நாறுகொள் பிரசம் ஊன்றும் நாடற்கு (நற் - 268)
சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய
கல்போல் பிரியலம் (அகம் - 1)
யாமே எமியமாக ஒழியச் சூழ்ந்தனையாயின் (அகம் - 32)
நுதலும் தோளும் திதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட அகம் - 119)
நேமி யுய்த்த நேஎ நெஞ்சின்
தவிரா ஈகைக் கவுரியர் மருக (புறம்-3)
இறைஞ்சுக பெரும நின் சென்னி (புறம்-6)
நிலைக்கொராஅ இலக்கம் போன்றன ( ,, -4)
யூபம் நட்ட வியன்களம் பலகொல் ( ,, -15)
நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருக்கி ,,

பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரைய
பாசிலை முல்லை முகைக்கும் (புறம்-17)
ஆனினங் கலித்த அதர்பல கடந்து ( ,, -138)
உறைப்புழி ஓலைபோல
மறைக்குவன் பெருமநிற் குறித்து வருவேலே (புறம்-295)
எல்லா இஃதொத்தன் என்பெறான்
கேட்டைக்காண் (கலி 61)
நின்னொடு சாவுவன் நின்றீத்தை (கலி 94)
எல்விற்றுப் போகாயின் ஏதோளிக் கண்டேனால் (கலி 117)
ஒருங்குருண்டு பிளந்து நெரிந்துருள்பு,
சிதறுபு அளறு சொரிபு நிலஞ்சேர (பரிபாடல் 2)
புகை பூ அழல் ஆராதனை அழல்பல ஏந்தி ( ,, 6)
அரிவையர் அமிர்த பானம் ( ,, )
உரிமைமாக்கள் உவகை அமிர்துய்ப்ப ( ,, 8)

என நால்வகைச் சொற்களும் செய்யுள் மரபாய் யாப்பின் வழிப்பட்டு வந்துள்ளமையும் அது மரபாமாறும் கண்டு கொள்க.

அஃதாவது நெல் விளைந்தது முற்றியது என்பது வழக்காக இருப்பவும் காய்த்தது எனக்கூறி உணர்த்திய நிலை, புலமைப் பாங்குடையதாகலின் அங்ஙனம் கூறுதல் மரமாக அமைந்து செய்யுளுறுப்பாயிற்றென அறிக. ஏனையவும் அவ்வாறே அமைந்து விளங்குமாற்றைக் கண்டு கொள்க.

மரபு காலந்தொறும் திரியும் பான்மைத்தாகலின் சங்கப் பாக்களுள் விரவி வந்த சொற்களும் உவமைகளும் தொடைகளும் இடைக்காலத்து இலக்கியங்களுள் சிறிது மாறியும் இக் காலத்திற் பெரிதும் வேறுபட்டும் வழங்குமாற்றை இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கி யாவும் யாப்புவழிப்பட்டு நிற்பதையறிக. பிறவும் அன்ன.

சூ 81 : அகவ லென்ப தாசிரி யம்மே

கருத்து : நிறுத்த முறையானே தூக்கென்னும் செய்யுளுருப்பு உணர்த்தத் தொடங்கி ஆசிரியத்தூக்கு ஆமாறு கூறுகின்றது.

'தூக்கு என்பதன் சொற்பொருள் மேல் உரைக்கப் பெற்றது. (சூ- )

உரை : அகவல் என வழங்கப்பெறும் ஓசை ஆசிரியப்பாவினது தூக்கோசையாம். அகவுதல் = அழைத்தல்: வலித்தும் மெலித்தும் நெகிழ்த்தும் கூறப்பெறும் ஓசையை அகவல் என்ப.

(எ-டு) நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே
(குறுந் - 3)

இதனை இசைத்து அடிதொறும் ஆசிரியத்தூக்கு நிகழுமாறு காண்க.

சங்கத்தொகை நூல்களும் கலியும் பரிபாடலும் தவிர்ந்த ஏனைய தொகையுள்வரும் பாக்களுள் எண்பது விழுக்காடு ஆசிரியப்பாக்களாகவே அமைந்துள்ளமை காணலாம். அதனான் ஆசிரிய அடியினைச் செந்தூக்கு என வழங்குவர் என்பது மேலே விளக்கப்பட்டது.

சூ. 82 : அதாஅன் றென்ப வெண்பா யாப்பே.

கருத்து : வெள்ளைத் தூக்கு ஆமாறு கூறுகின்றது.

உரை : அகவிக்கூறும் ஓசை அன்று வெண்பா யாப்பிற் குரிய தூக்கோசை எனக் கூறுவர் புலவர்.

எனவே அகவற்கு மறுதலைப்பட்ட ஓசையாகிய செப்லோசை வெண்பாவிற்குரிய தூக்கோசை என்பதாயிற்று. செப்பல் - விடுத்தல் ஆதலின் அழைத்தலுக்கு மறுதலை யாயிற்று. செப்பலாகிய விடை, வினாவை உள்ளடக்கிய தாகலின் இவ்வோசை வினாவும் செப்பும் போல எடுத்தலும் படுத்தலுமாகி வருமெனக் கொள்க.

(எ - டு) முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
உயங்காக்கால் உப்பின்றாம் காமம் - வயங்கோதம்
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண் சேர்ப்ப !
புல்லாப் புலப்பதோ ராறு நாலடி - 40 - 1)
யாகாவா ராயினும் நாகாக்க, காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு (குறள்- 127)

எனவரும்

"வெண்பாயாப்பே" என்றது வெண்பா யாத்தற்குரிய தூங்கோசை, என்றவாறு :

சூ. 83 : துள்ள லோசை கலியென மொழிப

கருத்து : கலிப்பாவிற்குரிய தூக்கோசை ஆமாறு கூறுகின்றது.

உரை : துள்ளி நிகழும் ஓசையைக் கலிக்குரிய தூக்குஓசை எனக் கூறுவர் புலவர்.

துள்ளுதலாவது தாவுதல். முரன்றுவரும் ஓசை ஈண்டுத் துள்ளல் எனப்பட்டது. துள்ளுதல் எனினும் கலித்தல் எனினும் ஒக்கும்.

இதனானே மேலே "அகவல்" என்றதும் "அகான்று" என்றதும் ஓசையையே என்பது புலனாகும்.

கலிப்பா வெண்பாவின் கிளையாதலானும் ஒருசார் கலிப்பாக்கள் செந்தூக்கானிறுதலானும் கொச்சகத்துள் ஒருசாரன வெண்பா ஒப்ப நடை பெறுதலானும், ஓசை பல்வேறுபட்ட உறுப்புகளை உடையது ஆகலானும் "கலியாகும்மே" என்னாது "கலியென மொழிப" என்றார்.

எனவே தரவும் இடைநிலைப்பாட்டுமாகிய உறுப்புக்கள் துள்ளலோசையான் நடத்தப்பெறும் என்பதும் உரிமை வகை, யான் கலிப்பாவிற்கு உரியதென்பதும் கலித்தல் என்பது 'தூக்கு' என்னும் உறுப்பென்பதும் புலனாகும்.

எ. டு. மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும்
அன்னந்தன்
அணிமிகு சேவலை அகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலக்கியம் மடப்பெடை
மதிநிழல் நீருட்கண் டதுவென உவந்தோடித்
துன்னத்தன் னெதிர் வரூஉம் துணைகண்டு
மிகநாணிப்
பன்மலரிடைப்புகூஉம் பழனஞ்சேர் ஊரகேள்!
(கலி-70)

இத்தரவுஉறுப்புத் துள்ளலோசையான் வந்தமை காண்க.

சூ. 84 : தூங்கலோசை வஞ்சியாகும்

கருத்து : வஞ்சிப்பாவிற்குரிய தூக்கோசை ஆமாறு கூறுகின்றது.

உரை : தூங்கலென்னும் ஓசை வஞ்சிப்பாவிற்குரிய தூக்கோசையாகும் எனக் கூறுவர் புலவர்.

தூங்கல் = நெகிழ்ந்து நிற்றல். இஃதிக்காலத்துத் "தொங்குதல்" என வழங்குகிறது. "தூங்குக தூங்கிச் செயற்பால" என்பதனான் இதன் பொருளை அறிக.

வஞ்சிப்பா ஆசிரியத்தின் கிளையாதலின் அகவலோசை சிறிது நீண்டு நெகிழின் அஃது வஞ்சிக்குரிய தூங்கலோசையாகின்றமை புனலாகும். இவ்வாறு ஓசை நீளுதலான் நாற்சீரின் குறைந்து இருசீரடிபாயும் முச்சீரடிபாயும் வஞ்சியடிகளாக நிற்கின்றன என்று அறிக. அதனான் சீர் குறைந்து ஓசை நிறையும் தூக்கினை வஞ்சித்தூக்கென்றனர் யாப்பறி புலவர் என்று தெளியலாம்.

(எ - டு) அரிமயிர்த் திரள் முன்கை
வாலிழை மடமங்கையர்
வரிமணற் புனைபாவைக்குக்
குலவுச்சினைப் பூக்கொய்து
தண்பொருநைப் புனல் பாயும்
விண்பொரு புகழ் விறல் வஞ்சி
பாடல் சான்ற விறல்வேந்தனும்மே
வெப்புடைய அரண் கடந்து
துப்புறுவர் புறம்பெற் றிசினே
புறம்பெற்ற வயவேந்தன்
மறம்பாடிய பாடினியும்மே
ஏருடைய விழுக்கழஞ்சின்
சீருடைய இழைபெற்றிசினே
இழை பெற்ற பாடினிக்கும்
குரல் புணர்சீர்க் கொலைவல் பாண்மகனும்மே
எனவாங்கு
ஒள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் றுசினே" (புறம்-11)

இவ்வஞ்சிப்பாவினுள் ஏழாவது அடியும் பதினைந்தாவது அடியும் செந்தூக்கு இறுதி இரண்டடிகளும் ஆசிரியச் சுரிதகம் ஏனைய அடிகள் வஞ்சித்தூக்கு ஆமாறு இசைத்துக் காண்க.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

### தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | Tamil Literature<br>—Prof. M. S. Purnalingam Pillai | உரு. 85/—<br>U.S.$ 17 |
| 2. | மொழி நூல்<br>—மாகறல் கார்த்திகேய முதலியார் | உரு. 75— |
| 3. | Tamil University Machine Translation System (TUMTS)<br>Co-authors : K. C. Chellamuthu K. Rangan K. Murugesan | Rs. 75/—<br>U.S.$ 15 |
| 4. | A Study on the Thanjavur Art Plate<br>—Prof. P. Saravanavel | Rs. 60/—<br>U,S.$ 12 |
| 5. | நாமதீப நிகண்டு<br>—கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர் | உரு. 68— |
| 6. | மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்<br>—பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை | உரு. 45/— |
| 7. | Indians in South Africa<br>—Prof. K. Nambi Arooran | Rs. 60/—<br>U.S.$ 12 |

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25%

நேரில் 30%

அஞ்சல் செலவு தனி

பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40%

விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

# கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

| | |
|---|---|
| யாழ் நூல் — விபுலானந்த அடிகள் | ரூ. 50 00 |
| கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்) | ரூ. 30 00 |
| கட்டுரைப் பூங்கா<br>(தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார்<br>நூற்றாண்டு நினைவு வெளியீடு) | ரூ. 60 00 |
| இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது<br>ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ் | ரூ. 6 00 |
| கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ 4 00 |
| நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் | ரூ. 3 00 |
| மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில்<br>அஞ்ஞானத்தின் வழக்கீடு –<br>பா. வே. மாணிக்க நாயக்கர் | ரூ. 2 00 |
| கவியரசு நினைவு மலர் | ரூ. 1 00 |
| தமிழரசி குறவஞ்சி | ரூ. 0 62 |
| சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம் | ரூ 0 25 |

பிற வெளியீடுகள் :

| | |
|---|---|
| கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்)<br>பேராசிரியர் ச. பாலசுந்தரம் | 7 50 |
| கலைக்கூத்தன் கவிதைகள் | ரூ. 6 00 |

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி. நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

## பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TB/24.

நூல்-அஞ்சல்




பெறுநர்

திருமிகு ..................................................

6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்நிலைய இதழ்,
அரண்மனை வளாகம்,
சிறப்பு, தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

## தமிழ்ப் பொழில் கட்டணம்

| | | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|---|
| தனியிதழ் | ரூ. | 2 | 50 | 3 | 00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ. | 30 | 00 | 60 | 00 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 250 | 00 | 600 | 00 |

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.